பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 26 திங்கட்கிழமை 14.10.2019 கதிர் 343

**இனி து ரகசியம் அல்ல!**

நேற்றுத் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை காலை விருந்துடன் தமது கொழும்பு இல்லத்தில் சந்தித்தார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ. அப்போது சில சுவாரஸியமான சம்பவங்கள் இடம்பெற்றன. அவற்றை வாசகர்களுடன் பக்கம் 02

## எல்பிட்டிய தேர்தல் முடிவுகள்தான் இன்று நாட்டு மக்களின் மனநிலை!

### தமிழ் ஊடக ஆசிரியர்களிடம் மஹிந்த கருத்து

கொழும்பு, ஒக். 14

எல்பிட்டிய பிரதேச சபையின் தேர்தல் முடிவுகள்தான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்கான கட்டியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை தமிழ் ஊடகங்களின் ஆசிரியர்களீடம் தெரிவித்தார்.

தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக் காலை தமிழ் ஊடகங்களின் பக்கம் 03





# இணக்கமேதுமின்றி முடிந்தது தமிழ்க் கட்சிகளின் சந்திப்பு!

### இன்று காலை மீண்டும் கூடுவதற்கு முடிவு

*(எஸ். நிதர்ஷன்)*

யாழ்ப்பாணம், ஒக். 14

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே பொது இணக்கப்பாடொன்றை ஏற்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணம், கிழக்குப் பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியங்களின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சந்திப்பு இணக்கமேதும் எட்டப்படாமலே முடிவடைந்தது. பக்கம் 03

## சஜித், கோட்டாபய ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்!

### சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஒக். 14

சஜித் பிரேமதாஸவும், கோட்டாபய ராஜபக்ஷவும் ஒரே அரசியல் கூட்டத்தைச் சேரந்தவர்கள் என ஜே.வி.பியின் தலைவர் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸநாயக்க குற்றம் பக்கம் 03

## கல்விக்கு முன்னுரிமை!

### கம்பஹா கூட்டத்தில் கோட்டா



கொழும்பு, ஒக். 14

எனது ஆட்சியில் கல்விக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பக்கம் 03

## ஒற்றையாட்சியை குறித்து நிற்கும் இடைக்கால அறிக்கை வேண்டாம்

### பொது ஆவணத்தில் கோரிக்கை ஒன்றை முன்வைக்குமாறு முன்னணி வலியுறுத்து

**(எஸ். நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், ஒக். 14

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சியில் அரசமைப்புச் சபை அமைக்கப்பட்டு கொண்டுவரப்பட்ட அரசமைப்பு மறுசீரமைப்பு இடைக்கால அறிக்கை நீக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை ஜனாதிபதி வேட்பாளர்களிடம் முன்வைக்கும் பொது ஆவணத்தில் இடம் பெறவேண்டும் பக்கம் 03

## பழைய தாளத்துக்கு ஆடவேமாட்டேன்!

### கூறுகின்றார் சஜித்



கொழும்பு, ஒக். 14

நான் ஆட்சிக்கு வந்தால் பழைய தாளத்துக்கு ஆடமாட்டேன் என ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அத்துடன் அதிகாரம் கொண்டதும் முதுகெலும்புள்ள ஜனாதிபதியாக மக்களுக் பக்கம் 03

## போட்டியில் இருந்து இனி விலகமுடியாது

கொழும்பு, ஒக். 14

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரும் தற்போது தேர்தலி பக்கம் 03

## ஜனாதிபதித் தேர்தலில் இருந்து சிவாஜிலிங்கம் விலகவேண்டும்

### ரெலோ தலைமைக் குழு அறிவிப்பு

வவுனியா, ஒக். 15

ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகுமாறு வேட்பாளர் சிவாஜிலிங்கத்தைக் கோருவதுடன், கட்சி விதிகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் ரெலோவின் தலைமைக் குழு கூடித் தீர்மானித்துள்ளதாக செயலாளர் நாயகம் என்.சிறிகாந்தா தெரிவித்தார்.

ஜனாதி பக்கம் 03

# தேர்தல் குறித்து முன்னரே முடிவெடுத்துவிட்டு மக்களை ஏமாற்றி வருகின்றது கூட்டமைப்பு

## ஆனந்தசங்கரி குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 14

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முடிவெடுத்துவிட்டனர். ஆனாலும் அவர்களின் தேவையை நிறைவேற்றிக்கொள்வதற்காகவே தாம் இன்னும் முடிவு எதனையும் எடுக்கவில்லை எனக் கூறி மக்களை ஏமாற்றி வருகின்றனர் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

தமது சுயநலன்களுக்காக மக்களை ஏமாற்றி வரும் கூட்டமைப்பின் சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா போன்றவர்கள் இனியும் மக்களை ஏமாற்றாது அரசியலில் இருந்து விலகி வழிவட வேண்டுமென்றும் அவர் கோரினார்.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் நாச்சிமார் கோவிலுக்கு அருகிலுள்ள தனது கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் குறித்து பல கட்சிகளும் தமது நிலைப்பாடுகளை அறிவித்து வருகின்றன. இதில் தமிழ்த் தரப்புக்கள் ஆழமாகச் சிந்தித்து ஒரு முடிவை எடுக்க வேண்டியிருக்கின்றது. அவ்வாறு எடுக்கின்ற முடிவை பகிரங்கப்படுத்தவேண்டிய தேவையும் உள்ளது. அதனடிப்படையில் நாம் எமது பிரச்சினைகள், தேவைகள் தொடர்பில் பேசி ஒரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்.

ஏனெனில் தேர்தலைப் புறக்கணிப்பது ஆரோக்கயமான தல்ல. இவ்வாறு தேர்தலைப் புறக்கணிப்பதால் பாதிப்புக்களே ஏற்படும். கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கூட இன்றைய பிரதமராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க சமஷ்டி முறையிலான ஆட்சியை முன்வைத்தே தேர்தலில் போட்டியிட்டார். அவருக்கு மக்கள் ஆதரவளித்தனர். ஆனாலும் ஒரு இலட்சம் வாக்குகளால் அவர் தோல்விடைந்திருந்தார்.

ஆக நாம் வாக்களித்திருந்தால் அவர் வெற்றி பெற்றிருப்பார். அதன் பின்னர் அந்தத் தீர்வை அவர் வழங்கியிரப்பாரோ இல்லையோ என்பதற்கப்பால் சமஷ்டி முறையிலான ஆட்சியைச் சிங்கள மக்களும் ஏற்றுக்கொண்டதாக இருந்திருக்கும். ஆனால் துரதிஷ்டவசமாக அது நடக்கவில்லை. ஆகவே இனியும் தேர்தலைப் புறக்கணிப்பதென்பது தேவையில்லாத வேலை.

ஆகவே தேர்தலில் நாம் ஒரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். அதற்கமைய எமது செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும். அதற்காக எழுத்து மூல அறிக்கைகளைக் கேட்பது ஆரோக்கியமானதல்ல. ஏனெனில் அதனை அவர்கள் தரப் போவதில்லை. அவ்வாறு தந்தாலும் அதனை வைத்து எதிராளிகள் எதிராகப் பிரசாரம் செய்து வெற்றி பெற முனைவார்கள்.

ஆகையால் உரிய முறையில் பேசிச் சரியான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். ஏனெனில் மனிதனுக்கு வார்த்தை தான் முக்கியம். ஆகவே அரசியலில் இருக்கின்றவர்கள் அந்த வார்த்தை தவறினால் அதிலிருந்த விலக வேண்டும். இந்த நிலைப்பாட்டுக்கமைய எமது அயல் நாடான இந்தியாவில் உள்ள ஆட்சி முறை போன்று வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை நாம் முன்வைக்கலாம்.

இந்தியாவின் தமிழ் நாட்டில் இருக்கின்ற ஆட்சி முறை போன்று அத்தகைய சட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும். அதாவது இந்திய மாநிலங்களுக்குக் கொடுத்த அதிகாரங்கள் இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு கொடுப்பதாக இருந்தால் நாங்களும் வரவேற்போம். அதே போன்று உலகத்திலுள்ள அனைத்து மக்களும் மகிழ்ச்சியடைவார்கள்.

இத்தகைய தீர்வு விடயம் குறித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில் உள்ளிட்ட தலைவர்களுடன் நான் பேசியிருக்கின்றேன். அவர்களும் இந்த விடயத்தில் அக்கறை கொண்டுள்ளனர். இவ்வாறு இந்திய முஷ்றியலான ஆட்சியை வழங்குவதற்குக் கூட தெற்கிலுள்ளவர்கள் தயாராக இருக்கின்றனர்.

ஆகவே ஆக்கபூர்வமான தீர்மானங்களை எடுக்கவேண்டியது அவசியமானது. அதனை விடுத்த ஒரு தீர்மானத்தை ஏற்கனவே எடுத்துவிட்டு இப்போது தீர்மானம் எடுக்கவில்லை என்று மக்களை ஏமாற்றுவது அயோக்கியத்தனம். குறிப்பாக கூட்டமைப்பினரைப் பொறுத்தவரை தமிழரசின் தலைவர் மாவை சேனாதிராசா தாம் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை என்றும் மக்களுடன் பேசித் தீர்மானம் எடுக்கப்படுமென்றும் கூறுகின்றார்.

ஏனெனில் அவ்வாறு முடிவெடுக்க முடியதவராகவும் எடுத்த முடிவை வெளிப்படுத்த இயலாதவராகவும் மாவை சேனதிராசா இருக்கின்றார். ஆனால் அவர் கட்சியிலுள்ள ஒருவர் இவர்கள் சார்பில் ஏற்கனவே முடிவெடுத்து விட்டார். ஆகவே நீங்கள் மக்களை ஏமாற்றாதீர்கள். ஜனநாயக முறையில் ஜனநாயக அரசியல் செய்ய முடியாவிட்டால் அரசியலிருந்து ஒதுங்கி வழி விடுங்கள். தொடர்ந்தும் மக்களை ஏமாற்றாமல் அதனைச் செய்வதே சிறந்தது.

புலிகளின் பெயரால் அரசியலுக்கு வந்து புலிகளை வைத்து அரசியல் செய்து நீங்கள் மக்களுக்கு என்ன பெற்றுக் கொடுத்தீர்கள். மக்களுக்கு எதுவும் செய்யாமல் உங்கள் பெட்டிகளையே நிரப்பியிருக்கின்றீர்கள். இப்போது கூட நீங்கள் ஒரு முடிவை எடுத்துவிட்டு முடிவுஎடுக்கவில்லை எனக் கூறுவதும் உங்கள் சுயநலன்களைப் பெறுவதற்காகத் தான். எனவே சம்பந்தன், சுமந்திரன், சேனாதிராசா போன்றவர்கள் உடன் பதவி விலக வேண்டும்.

இவ்வாறான அரசியல்வாதிகளே தமிழ் மக்களின் அழிவுக்கும் காரணமாக இருக்கின்றனர். இவ்வாறு தாம் தமது சுயநலன்களுக்காகத் தவறான முடிவுகளை எடுத்து மக்களையும் தவறாக வழிநடத்த முயல்கின்றனர். மக்கள் நலனுக்காகச் செயற்பட்ட எனக்கு துரோகிப் பட்டம் கட்டிய நீங்கள் எல்லோரும் உண்மையிலேயே மக்கள் விரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு இன்றைக்கும் துரோகம் இழைத்து வருவதால் பதவிகளில் இருந்து விலகிக் கொள்ளவேண்டும்.

பொது வேட்பாளர் தொடர்பில் சிவாஜிலிங்கம் என்னுடன் பேசியிருந்தார். இப்போது அவர் போட்டியிடுகின்றார். தமிழ் மக்கள் நலன் சார்ந்து தீவிரவமாகச் செயற்படுபவர் சிவாஜிலிங்கம். அவர் தேர்தலில் போட்டியிடுவது சரியோ பிழையோ என்பதற்கப்பால் உண்மையில் அவர் போட்டியிடுவதை நான் விரும்பவில்லை.

மேலும் பல்கலைக்கழக மாணவர்கள் அரசியல் கட்சிகளுக்கு ஆலோசனை வழங்குவதை விடுத்து மற்றவர்களிடம் ஆலோசனை பெற்றுக் கொள்வதே சிறந்தது - என்றார். (ஐ-07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகிரலாம் என நினைக்கிறேன்.

உரையாடலில் பங்குபற்றிய பந்துல குணவர்த்தன எம்.பி. தேர்தல் பிரசாரம் தொடர்பான ஒரு சிடி தட்டை பேச்சின் நடுவில் மஹிந்தவிடம் கொடுத்தார். அதைப்பெற்றுக்கொண்ட மஹிந்தர் தமது உதவியாளர் ஒருவரை அழைத்தார். அந்த சிடியைக் கொடுத்தார்.

அவர் தரப்பில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்குப் பொறுப்பான விடயங்களைக் கையாள்பவர் அவரின் இளைய மகனான றோஹித ராஜபக்ஷ. அந்த சிடியை உடன் எடுத்துச் சென்று றோஹிதவிடம் கொடுத்து ஒரு பிரதியாக்கம் செய்து தரும்படி கூறுங்கள் என்றார் மஹிந்தர். உதவியாளர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். ஒருவர் மட்டும் மஹிந்தரிடம் மெல்ல விடயத்தைப் போட்டுடைத்தார்.

அவர் (றோஹித ராஜபக்ஷ) வெளிநாடு போய்விட்டாரே...?" - என்றார்.

நேற்றிரவு வீட்டில் இருந்தாரே? எப்போது போனார்?" என்று அதிசயத்துடன் கோட்டார் மஹிந்தர்.

இன்று காலைதான் போனாரே...!" - என்றார் உதவியாளர்.

பார்த்தீர்களா....! நேற்றிரவு 12 மணி வரை என்னுடன் வீட்டில் பேசிக் கொண்டிருந்தார். அவர் வெளிநாடு போனமை எனக்குத் தெரியாது...!" - என்று அதிசயித்தார் மஹிந்தர்.

இதுதான், தற்கால இளைஞர்களின் - புதல்வர்களின் - போக்கு என்பது போல இருந்தது மஹிந்தரின் பதில்.

இன்று காலை போனார். நாளை மறுதினம் (15ஆம் திகதி) திரும்பிவிடுவார்" - என மற்றொரு உதவியாளர் விளக்கினார்.

றோஹித ராஜபக்ஷ அண்மையில்தான் திருமணம் செய்தவர். புதுமனைவியுடன் ஒரு ரவுண்ட் போயிருப்பார். அப்பாவுக்குச் சொல்லத் தவறிவிட்டார் போலும்....!

இன்னொரு விடயமும் நடந்தது. பெரமுனவின் முதல் பிரசாரக் கூட்டம் கடந்த 9ஆம் திகதி அநுராதபுரத்தில் நடைபெற்றபோது அங்கு உரையாற்றிய வேட்பாளர் கோட்டாபய அப்போது கூறிய சில விடயங்கள் குறித்துக் குறைபட்டுக் கொண்டனர் பத்திரிகையாளர் சிலர். தாம் பதவிக்கு வந்தால் அன்றே, அதுவரை சிறையில் இருக்கும் படையினர் எல்லோரையும் விடுவித்துவிடுவார் என்ற அவரின் ஆவேச உரை பலரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது என்றனர் அவர்கள்.

அதனைத் தாம் ஒப்புக் கொள்கின்றார் என்றார் மஹிந்தர். இந்த விடயத்தில் - அரசியல் உரைகளை ஆற்றுவதில் - கோட்டாபயவுக்கு அரசியல் முதிர்வு போதுமாக இல்லை என்று கூறிய மஹிந்தர், இதே விடயத்தை வேறு விதமாக முன்வைத்திருக்கலாம், அல்லது பேசாமல் விட்டிருக்கலாம் என்றார்.

அந்த உரையைப் பார்த்துக் கேட்டபோது தாமும் கூட அதிர்ந்து விட்டார் என்ற தொனியில் இருந்தது மஹிந்தரின் பதில்.

முல்லைத்தீவு பிள்ளையார் கோவில் தீர்த்தக் கேணியில் பிக்கு ஒருவரின் உடல் தகனம் செய்யப்பட்டமை குறித்துப் பேச்சு திரும்பியது. பிக்குவின் உடல் விஹாரை வளாகத்தில் எரிக்கப் பட்டது, அதுதானே நடந்தது என்ற மாதிரி அப்பாவித்தனமாகக் கேட்டார் மஹிந்தர்.

நடந்த விடயங்களைத் தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்கள் விளக்கமாக உரைத்தனர்.

நீதிமன்ற உத்தரவு ஒன்று இருந்து, அதை மீறும் வகையிலான நடவடிக்கைக்குப் பொலிஸார் உதவியிருந்தால் அது பெரும் தவறு. அந்தத் தவறுக்கு முதலில் ஆட்சியாளர்கள் - அதிகாரத்தில் - இருப்பவர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். என்னிடம் கேட்டால் நான் என்ன கூறமுடியும்?" - என்று அப்பாவித்தனமாகப் பதில் தந்தே தப்பிக் கொண்டார் மஹிந்தர்.

அடுத்து, தமிழரின் தேசிய இனப்பிரச்சினை பற்றிய விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்குக்கு மட்டுமல்ல, இலங்கை முழுவதும் மக்களுக்குப் பெரும்பாலும் ஒரே விதமான பிரச்சினைகள்தாம், எனினும் வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு மேலதிகமாக அரசியல் பிரச்சினை உள்ளதாக அரசியல்வாதிகள் கூறுகின்றனர். அது குறித்துப் பேசுவோம்.

தமிழர் தரப்பு தங்கள் எதிர்பார்ப்பை கூறட்டும். நாம் என்ன தருவோம் - தரமுடியும் - என்பதை எமது (தேர்தல்) விஞ்ஞாபனத்தில் கூறுவோம்." - என்ற சாரப்பட பதில் தந்தார் மஹிந்தர்.

தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனை அண்மையில் தாம் சந்தித்துப் பேசியமையை ஒப்புக் கொண்ட மஹிந்த ராஜபக்ஷ தீர்வுக்கான விடயங்கள் குறித்து அதில் அதிகம் பேசப்படவில்லை, இனிமேல் நடைபெறும் சந்திப்புகளில் அவை குறித்தும் பேசப்படக் கூடும் எனவும் கோடிகாட்டினார்.

வடக்கு, கிழக்குத் தமிழர்களின் பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வு மார்க்கங்கள் பற்றிய விடயங்களில் சஜித் பிரேமதாசவுக்கு போதிய புரிதலும், அறிவும் இல்லை என்ற சாரப்பட கருத்து வெளியிட்ட மஹிந்த ராஜபக்ஷ இதே விடயத்தைத் தம்மைச் சந்தித்த சுமந்திரனே தம்மிடம் ஒப்புக் கொண்டார் என்றார்.

மஹிந்த - சுமந்திரன் சந்திப்பில் இப்படி ஒரு முக்கிய விடயத்தை மஹிந்தர் வெளிப்படுத்தியமை பரபரப்பான விவகாரமாக சில வட்டாரங்களில் பேசப்பட்டது.

இது தொடர்பில் சுமந்திரனின் பிரதிபலிப்பு - பதில் - என்ன? முடியுமானால் நாளை அவரிடம் கேட்டுப் பெற்று உங்களுடன் பகிர முயற்சிப்பேன்.

- மின்னல் -

## அச்சுவேலி விபத்தில் ஒருவர் பலி!

அச்சுவேலி, தோப்பு பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில், ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழுந்தார். உயிரிழந்தவர், நவக்கிரியைச் சேர்ந்த பா. நிரோஜன் (வயது 33) என, அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த நபர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியருகே இருந்த மதிலுடன் மோதி விபத்து சம்பவித்துள்ளதாக, விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (ஐ)

## புத்தளம் மர ஆலையில் தீ!

கொழும்பு, ஒக். 14

புத்தளம், மதுரங்குளி நகரில் அமைந்துள்ள மர ஆலையில் ஏற்பட்ட தீயினால் அங்கிருந்த இயந்திரங்கள் மற்றும் மரப் பலகைகள் முற்றாக எரிந்துள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் சனிக்கிழமை இரவு 10 மணியளவில் இந்த மர ஆலையில் திடீரென ஏற்பட்ட தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து பொலிஸார் மற்றும் தீயணைப்புப் பிரிவினருடன் பொது மக்களும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

எனினும் தீ விபத்தினால் ஆலை முழுமையாக எரிந்துள்ளதுடன் அங்கிருந்த இயந்திரங்கள், தளபாடங்கள் உள்ளிட்டவைகளும் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்நிலையில் சுமார் 30 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்து இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# அரசமைப்புச் சபையின் முக்கிய கூட்டம் நாளை?

கொழும்பு, ஒக். 14

அரசமைப்புச் சபையின் முக்கிய கூட்டமொன்று நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சபையின் தலைவர் சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் முக்கிய விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தப்படவுள்ளது.

குறிப்பாக, ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நிரந்தரமான பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்படவேண்டும் என்று அரசமைப்புச் சபை பரிந்துரைத்திருந்தது.

எனினும் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அரசமைப்புச் சபையின் கூட்டத்தின்போது பிரசன்னமாகியிருந்த சட்டமா அதிபர் டப்புல டி லிவேரா, பதில் பணிப்பாளர் நாயகம் பதவியில் தொடர்ந்து கொண்டிருக்கின்ற சமகாலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாது என்று தெரிவித்திருந்தார்.

அத்துடன் நிரந்தரமான பணிப்பாளர் நாயகத்தினை நியமிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவிற்கு கிடையாது என்றும் சுட்டிக்காட்டியிருந்தார். இவ்வாறான பின்னணியிலேயே அரசமைப்புச் சபை கூடவுள்ளது.

இதன்போது, நிரந்தரமான பணிப்பாளர் நாயகத்தை நியமித்தல் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நியமனத்துக்கான அனுமதியளித்தல் உள்ளிட்ட விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. (ஐ)

# ஹிஸ்புல்லாவை களமிறக்கியமை சதி

## ஹக்கீம் குற்றச்சாட்டு

நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் சஜித் பிரேமதாஸவின் செயற்பாடுகள் முழுமையாக இருக்கும் என்பதை உறுதிப்படுத்த முடியும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

முஸ்லிம் வேட்பாளர் ஒருவர் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது என்பது முஸ்லிம் வாக்குகளை திசை திருப்பும் நோக்கத்தில் முன்னெடுக்கும் செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம். இது ஒரு சதித்திட்டமே தவிர வேறு ஒன்றும் இல்லை. இன்று நாம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உட்பட ஏனைய பிரதான முஸ்லிம் தலைமைகள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு அணியாகத் தீர்மானம் எடுத்துள்ள நிலையில் நாம் இணைந்துள்ள அணியை பலப்படுத்துவதை விடுத்து ஏனைய ஒரு அணிக்காக துணை போவது முஸ்லிம் வாக்குகளை திசைதிருப்ப வேண்டுமென்றே முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படும் வேட்பாளரை ஆட்சிக்கு கொண்டுவரும் நோக்கத்தில் எடுக்கும் சதித் திட்டமாகும் – என்றார். (ஐ)

### எல்பிட்டிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்களைச் சந்தித்த எதிர்க் கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் முடிவுகளில் நாங்கள் வெற்றிபெற்றுள்ளோம். அந்த முடிவுகள், ஜனாதிபதித் தேர்தலில் வரப்போகும் முடிவுகளைக் கட்டியம் கூறியுள்ளது.

அரசியல் பிரச்சினைகளுக்கு அப்பால் தெற்கில் உள்ள மக்களும் வடக்கில் உள்ள மக்களும் ஒரே பிரச்சினையையே எதிர்கொள்கின்றனர். ஒரே வகையான பொருளாதார பிரச்சினைகளே உள்ளன. பொருளாதாரத்தில் அவர்கள் நலிந்து போயுள்ளனர். விவசாயிகள் பட்டதாரிகள் மீனவர்கள் வர்த்தகர்கள் உட்பட்ட சமூகத்தினர் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். தமிழ் வர்த்தகர் கள் நான்கு பேர் தமது வர்த்தக பின்னடைவு காரணமாக அண்மையில் தற்கொலைசெய்து கொண்டதாக என்னிடம் சொல்லப்பட்டது.

அரசியல் தீர்வு குறித்து நாங்கள் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்வோம். பல தரப்பினருடன் நாங்கள் பேசிவருகிறோம். தமிழ் கூட்டமைப்பின் சுமந்திரன் எம்பியுடன் கூட நான் அண்மையில் பேசினேன். அது உத்தியோகபூர்வமற்ற சந்திப்பு என்றாலும் கட்சிக்கு அறிவுத்துவிட்டே சுமந்திரன் என்னைச் சந்தித்தார் என அறிந்தேன். நாங்கள் எங்களது கொள்கைகளை முன்வைத்த பின்னர் அவர்களுடன் உத்தியோகபூர்வமாகப் பேசுவோம். யாரையும் நாங்கள் களவாகச் சந்திக்கமாட்டோம். கூட்டமைப்பினர் தமது மக்களுக்கு எதனையாவது பெற்றுக் கொடுக்க – அதனைச் செய்ய முடிந்த தரப்புடன் இணைய வேண்டும். நான் அறிந்தவரை கூட்டமைப்பு சஜித்துடன் பேசிய போதும் தமிழ் மக்களுக்கான பிரச்சினை தீர்வில் அது சம்பந்தமான அறிவு சஜித்திற்கு இருப்பதாக கூட்டமைப்பினால் உணர முடியவில்லை. செய்வோம் எனக் கூறும் சஜித் எதனைச் செய்வது என்பதில் தெளிவில்லாமல் இருக்கிறார்.

எங்களைச் சர்வாதிகாரிகள் என்கின்றனர். ஆனால் வடக்கு மாகாண சபைத் தேர்தல் உட்பட பல தேர்தல்களை நாங்கள் நடத்தினோம். எவற்றையும் ஒத்திப் போடவில்லை. ஆனால் ரணில் தேர்தல்களை ஒத்திப்போடுவது நியாயம்தானா? ஜனநாயகமா? அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் நாட்டுக்கு நல்லதல்ல. இரண்டு அதிகாரங்கள் கொண்ட இருவர் எப்படி நாட்டை செய்வது? எனவே ஒருவர் – ஜனாதிபதி அல்லது பிரதமர் அதிகாரங்களை கொண்டவராக இருத்தலே நல்லது. – என்றார். (ஐ)

### கல்விக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வேன்.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ.

கம்பஹா மஹரவில் நேற்று நடந்த பிரசாரக் கூட்டத்தில் அவர் இதனைக் கூறினார்.

நவீன காலத்திற்கேற்ப கல்வித் தரம் மேம்படுத்தப்படவேண்டும். நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கை எடுப்பேன். இளைஞர் யுவதிகளின் எதிர்கால சுபீட்ச வாழ்வை உறுதிப்படுத்துவேன் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

### இணக்கமேது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளின் தலைவர்கள் ஒரே மேசையில் சந்தித்துப் பேசிய போதும் பொது இணக்கப்பாட்டை எட்டுவதில் இழுபறி நிலை ஏற்பட்டது. இதனால் நேற்று இரவு 10 மணி வரை நீடித்த இந்தச் சந்திப்பு இன்று பிற்பகல் 1.30 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

யாழ் .பல்கலைக்கழகத்துக்கு அண்மையிலுள்ள விடுதி ஒன்றில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுடன், இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும்,

புளொட் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்ந்தன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன் ஆகியோரும்,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் அதன் தலைவர் பொ. கஜேந்திரகுமார், செயலாளர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி சுகாஸ் கனகரட்ணம் ஆகியோரும்,

ரெலோ சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன்,

ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், அதன் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோரும்,

தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் க. அருந்தவபாலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நீண்ட நேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றபோதிலும் பொது இணக்கப்பாட்டை எட்டுவதில் இழுபறி நிலை ஏற்பட்டது. இதனை அடுத்து இன்று பிற்பகல் 1.30 மணிக்கு மீண்டும் கூடுவது என முடிவாகியுள்ளது. (ஐ-07)

### ஒற்றையாட்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தியுள்ளது.

எனினும் அதற்கு தமிழரசுக் கட்சி உள்ளிட்ட சில கட்சிகள் இணக்கம் தெரிவிக்க மறுத்ததால் தமிழ் கட்சிகளைப் பொது இணக்கப்பாட்டுக் கொண்டுவரும் பொது ஆவணத்தில் கையொப்பம் வைக்கும் கூட்டம் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது எனக் கூறப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே பொது இணக்கப்பாடொன்றை ஏற்படுத்தும் நோக்கில் நேற்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சந்தித்துப் பேசி பொது இணக்கப்பாடு ஒன்றை எட்ட முயன்றனர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சியில் அரசமைப்புச் சபை அமைக்கப்பட்டு கொண்டுவரப்பட்ட அரசமைப்பு மறுசீரமைப்பு இடைக்கால அறிக்கை ஒற்றையாட்சியையே குறித்து நிற்பதால் அதனை நீக்கவேண்டும் என்ற கோரிக்கை ஜனாதிபதி வேட்பாளரிடம் முன்வைக்கும் பொது ஆவணத்தில் இடம்பெற வேண்டும் எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுதியாக நின்றது.

எனினும் அதனை முன்வைப்பதற்கு தமிழரசுக்கட்சி உள்ளிட்டவை இணக்கம் தெரிவிக்கவில்லை.

அதனால் நேற்றைய கூட்டம் இறுதி முடிவு எட்டப்படாமல் இன்று பிற்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது. (ஐ-07)

### சஜித், கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டியுள்ளார்.

இவர்கள் இருவரும் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற முற்படுகின்றனர் எனவும் அவர் குற்றஞ்சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த இருவரில் யார் ஆட்சிக்கு வந்தாலும் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க முடியாது.

அத்துடன் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றால் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இம்முறை தேர்தலில் மக்கள் வாக்களிக்க வேண்டும் – என்றார். (ஐ)

### போட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து விலகி கொள்ள முடியாது எனத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வேட்பு மனுத் தாக்கல் செய்த எந்தவொரு வேட்பாளரும் வேறு ஓர் வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து, தேர்தலிலிருந்து விலகிக் கொள்ளச் சட்டத்தில் இடமில்லை என்றும் அவர் கூறினார்.

தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ள சில வேட்பாளர்கள் வேறு பிரதான வேட்பாளர்களுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்து தேர்தலிலிருந்து விலகிக்கொள்ள உத்தேசித்துள்ளன என வெளியான தகவல்கள் குறித்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

சட்ட ரீதியாக வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ள வேட்பாளர்களின் பெயர்கள் ஏற்கனவே வாக்குச்சீட்டில் உள்ளடக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வேறு ஓர் வேட்பாளருக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்து விலகி கொள்ள முடியாது என கூறியுள்ளார். (ஐ)

### பழைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குச் சேவையாற்றவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பிரதான கூட்டம் ஒன்று நேற்று வெள்ளவாய பிரதேசத்தில் இடம்பெற்றது.

ஐக்கிய தேசிய கட்சியின் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்–

இளம் சமுதாயத்தினருக்கு உரிய இடத்தை வழங்க வேண்டும் என்பதும், பெண்கள் பொருளாதார ரீதியில் சிறப்பாக வாழக்கூடிய நிலைமைகளை உருவாக்கிக் கொடுக்கவேண்டும் என்பதுமே எமது நோக்கம்.

நானும் எனது அரசும் பலமானதும் சிறப்பானதுமான இலங்கையை கட்டியெழுப்புவோம். அதில் நாட்டு மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழ முடியும் என்ற வாக்குறுதியை கொடுக்கிறேன்.

அதேபோல் தேசிய பாதுகாப்பு குறித்து அச்சம் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. எனது அரசில் சரத் பொன்சேகா பாதுகாப்பு அமைச்சராகக் கடமையாற்றுவார். அதேபோல் தேசிய பாதுகாப்பு விடயத்தில் ஜனாதிபதி என்ற ரீதியில் நானும் சகல பொறுப்பையும் ஏற்றுக்கொள்வேன் – என்றார். (ஐ)

### ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு சிவாஜிலிங்கம் வேட்பு மனு தாக்கல் செய்துள்ள நிலையில் அது தொடர்பாக ஆராய்வதற்காக ரெலோவின் தலைமைக் குழு வவுனியாவில் நேற்றுக் கூடியது.

அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறாகக் கட்சியின் அனுமதியின்றி சுயேச்சை வேட்பாளராக சிவாஜிலிங்கம் தேர்தலில் போட்டியிட நியமனப்பத்திரம் தாக்கல் செய்து தேர்தல் களத்தில் செயற்பட்டு கொண்டிருகிறார்.

அவர் கட்சியின் கட்டுபாட்டை மீறி செயற்பட்டுகொண்டிருக்கின்றார் என்ற முடிவின் அடிப்படையில், கட்சியின் அமைப்பு விதிகளுக்கு அமைவாக ஒழுங்கு நடவடிக்கை ஒன்று ஏன் எடுக்கப்படக்கூடாது என்ற காரணத்தை அவர் தெரிவிக்க விரும்பினால், அந்தக் காரணத்தை எழுத்து மூலமாக எதிர்வரும் சனிக்கிழமை மாலைக்குள் சமர்பிக்குமாறு அவரை கோருவதெனத் தலைமைக் குழு முடிவெடுத்துள்ளது.

அவர் விளக்கமளிக்கத் தவறினால், அல்லது அவர் அளிக்கும் விளக்கம் தலைமைக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால் அவர் மீது ஒழுக்காற்று விசாரணை முன்னெடுக்கப்படும்.

தேர்தல் விதிகளுக்கமைவாகத் தேவைப்படும் ஏனைய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். அதே நேரத்தில் கட்சியில் நீண்ட காலம் செயற்பட்டு வரும் தீவிர உறுப்பினர் என்ற வகையில் அவருக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதற்கும் தலைமைக் குழு தீர்மானித்திருக்கிறது.

அந்தவகையில் உடனடியாகத் தேர்தல் களத்திலிருந்து விலகுமாறு தலைமை குழு அவரிடம் வேண்டுகோள் விடுக்கின்றது. அந்த வேண்டுகோள் எழுத்து மூலமாக அவரிடம் கையளிக்கப்படும்.

கட்சியின் யாழ். கிளை நேற்று இந்த விடயம் தொடர்பாக கூடி கலந்துரையாடியிருந்தது. அந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடக் கட்சியின் மாவட்ட கிளைகளுக்கு உரிமையுண்டு. அந்த அடிப்படையில் நேற்று அங்கு ஒரு கூட்டம் நடைபெற்றது. கருத்து பரிமாற்றங்கள் இடம்பெற்றது. ஆனால் தீர்மானம் எதுவும் எட்டப்பட்டிருக்கவில்லை. கட்சியின் தலைமைக் குழுவே இந்த விடயத்தில் முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றது – என்றார். (ஐ-100)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தேர்தல் ஆணையத்தின் தவறு

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் முடிவுகள் இப்போது தென்னிலங்கையில் முக்கிய பேசு பொருளாக மாறியிருக்கின்றது.

இந்தத் தேர்தல் முடிவின் தாக்கம், தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் அதிகம் இருக்கும் என்று அவதானிகள் கூறுகின்றனர்.

பலாலியில் சர்வதேச விமான நிலையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் ஒரு கட்சியைச் சேர்ந்தவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க போன்றோர் பங்குபற்றுவது தேர்தல் பிரசார நடவடிக்கையாகி விடும் என்றும் –

அதனால் அத்தகைய அரச நிகழ்வில் கட்சி சார்ந்த அரசியல் பிரதிநிதிகள் பங்குபற்ற அனுமதிக்க முடியாது என்றும் – கடும் கறாராக உத்தரவிட்டிருக்கின்றது தேர்தல் ஆணையம்.

பேச்சுத் தமிழில் கூறுவதானால் ‘முட்டையில் மயிர் பிடுங்குவது மாதிரி’ கடும் சூடான நிலைப்பாட்டைத்தான் தேர்தல் ஆணையம் எடுத்திருக்கின்றது.

ஆனால், இப்படி ஒரு ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்பு மனுக்கள் கோரப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டு, பிரசாரம் சூடாக நடந்து கொண்டிருக்கையில், எல்பிட்டிய பிரதேச சபை போன்ற ஒரு குறுகிய பிரதேசத்துக்குத் தேர்தலை நடத்தி முடிவை அறிவிப்பது, அதில் வெற்றி பெறும் தரப்புக்கு நடைபெறவிருக்கும் தேசிய ரீதியிலான ஜனாதிபதித் தேர்தலில் முறையற்ற செல்வாக்குச் செலுத்த வாய்ப்பாகிவிடும் என்பது இவ்வளவு தூரம் தேர்தல் சட்டங்களையும் விவகாரங்களையும் கடு ல்மையாகக் கையாளுவதாகக் கூறிக் கொள்ளும் தேர்தல் ஆணையத்துக்குத் தெரியாதா?

ஆனால், அந்தத் தவறைத்தான் தேர்தல் ஆணையம் செய்திருக்கின்றது.

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் வேட்பு மனு சர்ச்சை தொடர்பாகத் தீர்ப்பளித்த உயர்நீதிமன்றம் அந்தத் தேர்தலை மேலும் தாமதப்படுத்தாமல் இயன்ற விரைவில் நடத்தும்படி உத்தரவிட்டிருந்தது, அதனால் எமக்கு வேறு வழியிருக்கவில்லை, அத்தேர்தலை இப்படி ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நடத்த வேண்டியதாயிற்று என்று தேர்தல் ஆணையம் தனது நடவடிக்கைக்கு இப்போது நியாயம் கற்பிக்க முயலலாம்.

ஆனால், உண்மையில், இப்படி இடையில் ஒரு பிரதேச சபைத் தேர்தலை நடத்துவது, தேசிய ரீதியில் மிக முக்கியமான ஜனாதிபதித் தேர்தலில் தவறான – முறையற்ற – விளைவுகளை ஏற்படுத்தும், ஆகவே அந்தப் பிரதேச சபைத் தேர்தலை சற்றுக் காலம் பிந்தி நடத்துவதற்கு அனுமதி தாருங்கள் என்று தேர்தல் ஆணையம் தானாக ஒரு கோரிக்கையை உயர் நீதிமன்றுக்கு வைத்திருக்குமானால் உயர்நீதிமன்றம் நிச்சயம் அந்த விவகாரத்துக்கு முக்கிய – மேலான – இடம்கொடுத்து அதனைப் பரிசீலித்து இருக்கும்.

தேர்தல் ஆணையாளர்களில் ஒருவர், இப்படி ஜனாதிபதித் தேர்தலுக்குரிய பிரசார காலத்தில் பிரதேச சபை ஒன்றின் தேர்தலை நடத்துவது ஜனாதிபதித் தேர்தலில் முறையற்ற விளைவுகளை ஏற்படுத்தும் என்று சுட்டிக் காட்டியும் கூட, அதைத் தவிர்ப்பதற்குத் தேர்தல் ஆணையம் சரியான நடவடிக்கைகளைக் கையாளாமல் தவிர்த்திருக்கின்றமை கண்டனத்துக்குரியதே.

சரியோ, பிழையோ இந்தப் பிரதேச சபைத் தேர்தல் முடிவு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு பெரும் ஊக்குவிப்பு மருந்தாகவும், ஐக்கிய தேசிய முன்னணிக்குப் பெரும் பின்னடைவாகவும் அமைத்திருக்கின்றமை திண்ணம்.

கடந்த காலத்தில் இந்தப் பிரதேச சபைக்கான தேர்தல்களில் ஐ.தே.கட்சி பெற்றுக் கொண்ட வாக்கு வீதம் நோக்கற்பாலது. 2002 இல் 48 வீதம்; 2006 இல் 36.43 வீதம்; 2011 இல் 30.59; 2015இல் 40.83 வீதம்; அது, இப்போது 2019 இல் ஆக 24.37 வீதம்.

“வரப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் தென்னிலங்கையின் வாக்கு வீதம் இப்படித்தான், அமையும் அந்தத் தேர்தல் முடிவுக்கான ‘ஸாம்பிளே’ (முன்மாதிரியே) இப்போது வந்திருக்கின்றது” – நேற்று தமிழ்ப் பத்தரிகை ஆசிரியர்களுடனான காலை விருந்துணவு சந்திப்பின்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கூறியிருக்கின்றார்.

எல்பிட்டிய பிரதேசம் காலம் காலமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கோட்டை என்பதால், சு.கவிலிருந்து பிரிந்த பொதுஜன பெரமுனவும், சு.கவும் சேர்ந்து அங்கு சுமார் எழுபது வீத வாக்குகளைப் பெற்றமை புதுமையல்ல, பெரிய மாற்றம் அல்ல என்று சில தரப்புகள் வாதிடுகின்றன.

ஆனால், மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வீழ்ந்த வாக்குகளின் வீதம் கணிசமாக வீழ்ச்சியடைந்து வந்திருக்கின்றமை கண்கூடு. அதுவும் இந்தத் தேர்தலில் அதன் வாக்கு வங்கி மொத்த வாக்களிப்பின் கால்வாசிக்கும் குறைவாகி விட்டமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு மிக ஆபத்தமான நிலைமை நீடிப்பதையே சுட்டிக் காட்டி நிற்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் காலம் சரியாக இன்னும் ஒரு மாதம்தான். இதற்குள் சஜித் ஆதரவு அலை புதிதாக சூடு பிடித்தாலன்றி, கோட்பாபய அதிகாரத்துக்கு வருகின்றமையைத் தடுக்க முடியாமல் போகும் என்பதே சஜித் தரப்பு உணர வேண்டிய கசப்பான உண்மையாகும்.

# பிரேமதாஸவை அஷ்ரப் ஜனாதிபதியாக்கியமைபோன்று முஸ்லிம் காங்கிரஸ் சஜித்தை ஜனாதிபதியாக்கவேண்டும்

## நிந்தவூரில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 14

ரணசிங்க பிரேமதாஸவை முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் ஜனாதிபதியாக கொண்டுவந்ததுபோல, முஸ்லிம் காங்கிரஸ் தற்போதைய வேட்பாளரான அவரது மகனை ஜனாதிபதியாக கொண்டுவர வேண்டும். சஜித்தின் வெற்றி ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியல்ல, அது முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் வெற்றி என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட மத்திய குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நிந்தவூரில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த ஜனாதிபதித் தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. நாட்டின் ஜனாதிபதியோ, பிரதமரோ, எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது சபாநாயகரோ போட்டியிடாமல் புதிய முகங்கள் தேர்தலில் களமிறக்கப்பட்டுள்ளனர். அதுவும் பிரதான கட்சிகள் தங்களுக்கு இருந்த பலவிதமான உள்ளக முரண்பாடுகளுக்கு முகம் கொடுத்த பின்னணியில்தான் தங்களது வேட்பாளர்களை அறிவித்துள்ளன.

ஆட்சிக் கவிழ்ப்பின்போது பல இடங்களில் நாங்கள் கூட்டங்களை நடத்தினோம். அந்த இடங்களில் சஜித் பிரேமதாசவுக்கு மக்கள் மத்தியில் பலத்த ஆதரவு காணப்பட்டது. பிரதமர் பேசுவதை விட சஜித் பேசுவதையே மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். இதனால், நிகழ்ச்சி நிரலை மாற்றி இறுதியில் சஜித் பேசுகின்ற அளவுக்கு நிலைமை காணப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியில் மாற்ற வரவேண்டும் என்று பலரும் விரும்பினார்கள். கட்சிக்குள் இருப்பவர்களே அதை பேசுவதற்கு தயக்கம் காட்டினார்கள். இந்நிலையில், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாச களமிறக்கப்பட வேண்டும் என்று பிரதமர் முன்னிலையில் நான் தைரியமாக கூறினேன். அன்றுமுதல் இன்று வரை எனது நிலைப்பாட்டில் உறுதியுடன் இருந்து கொண்டிருக்கிறேன்.

முஸ்லிம் காங்கிரஸ் ஓர் அரசியல் கட்சியாக பரிணமித்து 1988 இல் முதலில் எதிர்கொண்ட ஜனாதிபதி தேர்தலில் ரணசிங்க பிரேமதாசவை மறைமுகமாக ஆதரித்தது. அவர் எங்களது வாக்குகளினால்தான் வெற்றிபெற்றார் என்பது, பின்னர் வந்த பாராளுமன்ற தேர்தலில்களில் நாங்கள் தனித்துப் போட்டியிட்டு பெற்ற வாக்குகளின் மூலம் நிரூபணமானது.

கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் ஐக்கிய தேசியக் கட்சியுடன் வெளிப்படையாக மோதினாலும், ஜனாதிபதியாகவிருந்த ரணசிங்க பிரேமதாசவுடன் நெருக்கமான உறவைப் பேணிவந்தார். அட்டாளைச்சேனை கல்வியில் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில், ரணசிங்க பிரேமதாச மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும் என்று அவரின் முன்னாலேயே தலைவர் அஷ்ரப் கூறியிருந்தார்.

தற்போது போட்டியிடும் அவரது மகனை வெல்லவைப்பது முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களின் கடமையாகும். சஜித் பிரேமதாச வெற்றிபெறுவது என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியல்ல, அது முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் வெற்றியாகும். அஷ்ரப் உருவாக்கிய ஜனாதிபதியாக ஆர். பிரேமதாச இருந்ததுபோல, முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கிய ஜனாதிபதியாக சஜித் பிரேமதாசவை நாம் அடையாளப்படுத்த வேண்டும்.

ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக விரல்நீட்டிய அனைத்து தரப்புகளும் ஒட்டுமொத்தமாக சங்கமித்திருக்கும் அணிக்கு எதிராகத்தான், நாங்கள் இத்தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க முன்வந்திருக்கிறோம். முஸ்லிம் தரப்பு அடிமை சமூகமாக இருக்க வேண்டுமா, இல்லையா என்ற போராட்டம்தான் இந்த தேர்தலின் பின்னால் இருக்கிறது.

முஸ்லிம் விரோத சக்திகளின் பின்னால் மறைந்துகொண்டால் தப்பித்துக்கொள்ள முடியும் என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். எங்களது கௌரவத்தை யாருக்காகவும் விட்டுக்கொடுக்க முடியாது. நீதி, நியாயத்துக்காக போராடும் இயக்கம் தப்பிப் பிழைப்பதற்காக அநியாயக்கார கும்பலிடம் சரணடைய முடியாது. தனது சொத்துகளை காப்பாற்றுவதற்காக சிலர் இத்தேர்தலில் களமிறங்கியுள்ளனர். இது முஸ்லிம் வாக்குகளை சிதறடிக்கும் சதித்திட்டமாகும்.

சஜித் பிரேமதாச வெற்றுபெறுவதற்கு சிறுபான்மை மக்கள் தங்களது வாக்களிப்பு விகிதாசாரத்தை இன்னும் அதிகரிக்க வேண்டும். அண்மையில் கல்முனை தேர்தல் தொகுதியில் அதிகூடிய வாக்களிப்பு பதிவாகியிருந்தது. அதுபோல தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் அதியுச்ச வாக்குப்பதிவு இடம்பெற வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் நமது வெற்றிவாய்ப்புகளை அதிகரித்துக்கொள்ள முடியும்.

முஸ்லிம்களில் சிலருக்கு இப்போது ஜே.பி.பி. மோகம் வந்துள்ளது. ஜே.வி.பி.க்கு வாக்களிப்பது என்பது மறைமுகமாக கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரளிப்பதாகும். ஜே.வி.பி. வேட்பாளர் ஒருபோதும் வெற்றிபெறப் போவதில்லை. சமூகத்துக்காக குரல்கொடுத்து பேசினார்கள் என்பதற்காக வெற்றிபெறாத ஒருவருக்கு வாக்களித்து உங்களது பொன்னான வாக்குகளை வீணாக்கவேண்டாம். ஜே.வி.பி.யினர் வெளிப்படையாக எதையும் கையாள்வதற்கு தயக்கம் காட்டினார்கள் என்பதையும் நீங்கள் மறந்துவிடக்கூடாது – என்றார். (ஐ)

## புள்ளடியிட்ட வாக்குச்சீட்டை படம் பிடித்தவர் கைதானார்!

கொழும்பு, ஒக். 14

புள்ளடியிட்ட வாக்குச் சீட்டைப் படம் பிடித்த இளைஞன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எல்பிட்டிய , தல்காஸ்பேவில் உள்ள வாக்குச் சாவடி ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எல்பிட்டியா பிரதேச சபை தேர்தலுக்கான வாக்குச் சாவடிக்கு நியமிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளால் அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாக்குச் சாவடிகளுக்குள் வாக்குச் சீட்டுகள் அல்லது புள்ளடியிட்ட வாக்குச் சீட்டுகளைப் புகைப்படங்கள் அல்லது வீடியோ எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இது தேர்தல் விதிமீறலாகும். (ஐ)

## கோட்டாபய மீது மீண்டும் வழக்கு

கொழும்பு, ஒக். 14

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ, தனது அமெரிக்கக் குடியுரிமையை இன்னமும் நீக்கிக் கொள்ளவில்லை என்றும், இதன் காரணமாக எதிர்வரும் நாள்களில் நீதிமன்றத்தில் மீண்டும் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

எனவே ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு என்ன நடக்குமோ தெரியவில்லை எனவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

**நாளை** 15.10.2019 செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம்: அச்சுவினி பி.ப 1.22 வரை
திதி : துதியை பி.இ 5.35 வரை
இராகுகாலம் : 9.02 – 10.32
சுப நேரம் : 3.02 – 4.32

# யாழ். விமான நிலைய நிறைவுப் பணிகளை நேரில் ஆராய்ந்த அர்ஜுன, சுரேன் ராகவன்





யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் நிறைவுப் பணிகள் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் ஆகிய இருவரும் நேற்று ஆராய்ந்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையில் எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை 'யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம்' உத்தியோகபூர்வமாக மக்கள் பாவனைக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த அபிவிருத்தி திட்டமானது போருக்கு பின்னரான பெரும் முன்னேற்றகரமான விடயமாகும். புலம்பெயர்ந்துள்ள நம் உறவுகள் மீண்டும் நேரடியாக யாழ்ப்பாணம் மண்ணில் வந்து தமது உறவுகளை இலகுவாகச் சந்திப்பதற்கான வழியாக இது அமைகின்றது.

இந்த விமான போக்குவரத்தின்போது தற்போது தமிழ்நாட்டிற்கான 7 விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதனை வாரத்திற்கு 12 விமான சேவைகளாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார். (ஐ)

## காணாமற்போன மாணவன் நான்கு நாள்களின் பின் மீட்பு

### யாழ்.நகரத் தனியார் விடுதி ஒன்றில் தங்கியிருந்தார் என்று வாக்குமூலம்

4 நாள்களாகக் காணாமற் போயிருந்த கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன், இணுவில் சின்னப் பள்ளிக்கூடம் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நடமாடிய வேளை பொது மக்களால் அடையாளம் காணப்பட்டு மீட்கப்பட்டுள்ளார்.

மாணவன் தற்போது சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நகரிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் கடந்த 4 நாள்களாகத் தங்கியிருந்தார் என அவர் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

உடுவிலைச் சேர்ந்த 16 வயதுப் பாடசாலை மாணவன் வீட்டிலிருந்து கடந்த 10ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் மருந்து எடுப்பதாகக் கூறிச் சென்ற நிலையில் இரவு வரை வீடு திரும்பாததால் மறுநாள் வெள்ளிக்கிழமை தாயாரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது.

உடுவில் அம்பலவாணர் வீதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் ஜனுக்சன் (வயது - 16) என்ற கொக்குவில் இந்துக் கல்லூரியில் பயிலும் மாணவனே இவ்வாறு காணாமற்போயிருந்தார்.

இந்த நிலையில் 4 நாள்களின் பின்னர் நேற்று முற்பகல் 10 மணியளவில் இணுவில் சின்னப் பள்ளிக்கூடம் பகுதியில் மாணவன் நடமாடிய வேளை பொது மக்களால் அடையாளம் காணப்பட்டு மீட்கப்பட்டார். அவர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிஸ் விசாரணைகளுக்காக அவர் தற்போது சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தான் கடந்த 4 நாள்களாக யாழ்ப்பாணம் நகரில் உள்ள தனியார் விடுதியில் தங்கியிருந்தார் எனக் குறிப்பிடும் மாணவன், யார் அழைத்துச் சென்றது அல்லது யாருடன் தங்கியிருந்தார் உள்ளிட்ட மேலதிக தகவல்களைத் தெரிவிக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## பலாலி சர்வதேச விமான நிலைய திறப்பு விழா ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பித்துவைப்பதற்கான அனைத்துக் கள வேலைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன என சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எச்.எம்.சி. நிமலசிறி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை, விமான நிலையத்தை இயக்கி வைப்பதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் நிறைவுசெய்துள்ளோம்.

இந்தியாவில் இருந்து வாரத்தில் 7 விமானங்களைப் பலாலிக்கு இயக்குவதற்கு இந்திய அரசு அனுமதியும் கிடைத்துள்ளது. விமான நிலையத்தின் செயற்பாடு களை மேற்பார்வையிடுவதற்கு, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் இரண்டு அதிகாரிகள் ஆரம்பத்தில் பொறுப்பாக இருப்பார்கள் என்றும் அவர் கூறினார். (ஐ)

## பலாலியில் பணிபுரியவுள்ள குடிவரவு அதிகாரிகள் 15 பேர்

யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையத்தில் பணியாற்றுவதற்காகக் குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் 15 பேர் பலாலிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

அடுத்தவாரம் யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையம், திறந்து வைக்கப்படவுள்ள நிலையில், அங்கு குடிவரவு, குடியகல்வுச் சோதனைகளை மேற்கொள்வதற்காக 15 அதிகாரிகள் கொழும்பில் இருந்து அனுப்பப்படவுள்ளனர்.

குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் பி.ரத்நாயக்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

பலாலியில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கான தங்குமிட வசதிகள் இன்னமும் செய்து கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கான தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும் வரை, இலங்கை இராணுவத்தினரால் அளிக்கப்படும் தங்குமிட வசதிகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்றும் அவர் கூறினார்.

## சஜித் அமைச்சின் திணைக்களத்தால்தான் நீராவியடி, கன்னியாவில் பிரச்சினைகள்

### டக்ளஸ் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 14

சஜித்தின் அமைச்சின் கீழ் இயங்கும் தொல்பொருள் திணைக்களமே நீராவியடி, கன்னியாவில் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் தேசியக் கூட்டமைப்பு எப்பொழுதும் சரியான தீர்மானங்களை எடுப்பதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா வாடி வீட்டில் நேற்றுமுன்தினம் மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் கூறுகையில், முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலயம், கன்னியா பிரச்சினைகள் சஜித்தின் அமைச்சின் கீழ் இயங்கும் தொல்பொருள் திணைக்களம் ஏற்படுத்தியுள்ள பிரச்சினைகளாகவே உள்ளன

மேலும் கல்முனை தமிழ் பிரதேச சபை பிரிவை தரமுயர்த்துவது தொடர்பான பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. அத்தோடு தோட்டத் தொழிலாளர்களின் ஐம்பது ரூபாய் சம்பள உயர்வை கூட தற்போதைய ஆட்சியாளர்கள் இதுவரை செய்து முடிக்கவில்லை.

இந்நிலையில், தென்னிலங்கையின் நிலைவரப்படி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வேட்பாளரே ஆட்சிக்கு வருவார் என நம்புகின்றனர். எனவே தமிழ் மக்களும் இந்த வெற்றியில் பங்களிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

கடந்த காலங்களில் நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும். நடக்கப்போவது நல்லதாகவே நடக்கட்டும் என்று நான் சொல்லுவது, பழிவாங்கும் உணர்வு இல்லாமல் நாம் இழந்ததை மீள பெற்றுக்கொண்டும் இருப்பதை பாதுகாத்துக்கொண்டும் முன்னோக்கி போக வேண்டும் என்பதேயாகும் என்று தெரிவித்தார்.

## மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 14

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை-

**யாழ் பிரதேசத்தில் -**

இலங்கை வங்கி பிரதேசம் சுன்னாகம் ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

வலைப்பாடு, வேரவில், கிராஞ்சி, பொன்னவெளி, பாலாவி ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# காஷ்மீரில் 70 நாள்களுக்கு பின் இன்று முதல் செல்போன் சேவை

ஸ்ரீநகர்,ஒக்.14

காஷ்மீரில் சுமார் 70 நாள்களுக்கு பிறகு இன்று (திங்கட்கிழமை) நள்ளிரவு முதல் செல் போன் சேவை வழங்கப்படும் என மாநில அரசு அறிவித்து உள்ளது.

காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து கடந்த ஒகஸ்ட் 5 ஆம் திகதி ரத்து செய்யப்பட்டதை முன்னிட்டு மாநிலத்தில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு இருந்தன. இதில் தொலைபேசி, செல்போன், இணையதள சேவை முடக்கமும் அடங்கும். பின்னர் அங்கு இயல்பு நிலை திரும்பத் தொடங்கியதால் படிப்படியாக இந்தச் சேவைகள் திரும்ப வழங்கப்பட்டன.

குறிப்பாக ஜம்மு பிராந்தியத்தில் இந்த சேவைகள் முற்றிலும் வழங்கப்பட்ட நிலையில், காஷ்மீரில் வெறும் தொலைபேசி இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டன. தற்போது சுமார் 70 நாள்களுக்குப்பின் அங்கு செல்போன் சேவையும் வழங்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.



அதன்படி அனைத்து நிறுவனங்களின் போஸ்ட் பெய்ட் செல்போன் இணைப்புகளும் இன்று (திங்கட்கிழமை) நள்ளிரவு முதல் திரும்ப வழங்கப்படும் என மாநில அரசின் செய்தி தொடர்பாளரும், முதன்மை செயலாளருமான ரோகித் கன்சால் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மாநிலத்தின் ஒட்டுமொத்த பாதுகாப்பு நிலைமையை ஆய்வு செய்த பின் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவித்தார்.

காஷ்மீரில் அமுல்படுத்தப்பட்டு இருந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் 99 சதவீதத்துக்கும் மேற்பட்ட பகுதிகளில் விலக்கப்பட்டு இருக்கின்றன எனக் கூறிய அவர், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காவலில் வைக்கப்பட்டு இருக்கும் தலைவர்களை விடுவிக்கும் வகையில், அவர்கள் மீதான வழக்குகளை மாநில அரசு மறு ஆய்வு செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

இதற்கிடையே ஸ்ரீநகரில் உள்ள சந்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் பயங்கரவாதிகள் சிலர் கையெறி குண்டு ஒன்றை வீசிவிட்டு தப்பி ஓடினர். இந்த குண்டுவெடித்ததில் 5 பேர் காயமடைந்தனர். இதனால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# மும்பையில் குடியிருப்பு கட்டடத்தில் தீ விபத்து



மும்பையில் குடியிருப்புக் கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்ட நிலையில், 8 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

மும்பை சார்னி சாலையில் உள்ள டிரீம்லேன்ட் சினிமா என்ற பகுதிக்கு அருகில் உள்ள ஆதித்யா ஆர்கேட் என்ற குடியிருப்புக் கட்டடத்தில் நேற்றுக் காலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த தீயணைப்புத் துறையினர் சில மணிநேர போராட்டத்துக்கு பிறகு தீயை அணைத்தனர். தீ விபத்து ஏற்பட்ட கட்டடத்துக்குள் இருந்த 8 பேரை தீயணைப்புத்துறையினர் பாதுகாப்பாக மீட்டனர்.

# தேர்தல் அறிக்கையை வெளியிட்டது பா.ஜ.க.

சண்டிகர்,ஒக்.14

அரியானா சட்டசபை தேர்தலில் போட்டியிடும் பா.ஜ.க., தனது தேர்தல் அறிக்கையை நேற்று வெளியிட்டுள்ளது.

அரியானா மாநில சட்டசபை தேர்தல் ஒக்ரோபர் 21 ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் ஆளும் கட்சியான பா.ஜ.க. ஆட்சியை தக்கவைக்கும் வகையில் தீவிரமாக பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறது.




இந்நிலையில், அரியானா மாநிலத்தின் சட்டசபை தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை தலைநகர் சண்டிகரில் பா.ஜ.க. நேற்று வெளியிட்டுள்ளது.

தேர்தல்அறிக்கையை பா.ஜ.க. செயல் தலைவர் ஜே.பி.நட்டா வெளியிட்டார். அப் போது முதல் மந்திரி மனோகர் லால் கட்டார் மற்றும் பா.ஜ.க. மாநில தலைவர் சுபாஷ் பராலா உள்பட பலர் உடனிருந்தனர்.

இந்த தேர்தல் அறிக்கையில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு, விவசாயிகளுக்கு இரட்டிப்பு வருமானம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் அடங்கியுள்ளன.

# ரஜினிகாந்த் இமயமலைக்கு ஆன்மிக பயணம்



சென்னை,ஒக்14

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் தர்பார் படத்தில் நடித்துள்ள ரஜினிகாந்த் நேற்றுக் காலை ஆன்மிக பயணமாக இமயமலை புறப்பட்டுச் சென்றார்.

இமயமலை செல்வதற்காக சென்னையில் இருந்து விமானம் மூலம் டில்லி சென்ற நடிகர் ரஜினிகாந்த், அங்குஒருவர காலம் தங்கியிருப்பார் என தகவல் வெளியாகியுள்ளது.

# பட்டாசு ஆலையில் வெடி விபத்து பெண்கள் உட்பட நால்வர் சாவு

புதுச்சேரி,ஒக்14

புதுவை அருகே நடந்த வெடி விபத்தில் படுகாயமடைந்த பட்டாசு ஆலைபெண்உரிமையாளர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனால் பலி எண்ணிக்கை 4 ஆனது.

புதுவை அரியாங்குப்பம் மணவெளியைச் சேர்ந்தவர் குணசுந்தரி (வயது 45). இவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை பாகூர் அருகே உள்ள கரையாம்புத்தூர் அய்யனார் கோவில் ஏரிக்கரையில் உள்ளது. தீபாவளி பண்டிகையையொட்டி பட்டாசு தயாரிப்பில் தொழிலாளர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை மதியம் பட்டாசுகள் வெடித்ததில் அங்கு வேலை பார்த்துக் கொண்டிருந்த விழுப்புரம் சொர்ணாவூரைச் சேர்ந்த தீபா, கரையாம்புத்தூர் வரலட்சுமி ஆகியோர் அந்த இடத்திலேயே உடல் சிதறி பலியானார்கள்.

# ஓட்டோ- லொறி விபத்து 3 சிறுவர்கள் உயிரிழப்பு

விழுப்புரம்,ஒக்14

விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் அருகே சரக்கு ஓட்டோவும்,லொறியும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் 3 சிறார்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

புதிதாக வாங்கிய ஓட்டோவுக்கு பூஜை போடுவதற்காக உள்ளூர் சிறுவர்களை ஓட்டுநர் அழைத்துக் கொண்டு சென்ற போது கடம்பூர் என்ற இடத்தில், வளைவான சாலையில் சென்ற போது வலது புறமாக ஏறிய ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்து எரிவாயு ஏற்றிச் சென்ற லொறி மீது நேருக்கு நேர் மோதியது. ஓட்டோ உருக்குலைந்து போனது. ஓட்டோவில் இருந்த மகாலட்சுமி, பொன்மலை செல்வன், தமிழரசன் ஆகிய மூன்று சிறார்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.




# புருக்ளினில் துப்பாக்கி சூடு சம்பவத்தில் 4 பேர் பலி



நியூயோர்க்,ஒக்.14

நியூயோர்க் நகரின் புருக்ளின் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒரு பெண் உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.

கிரவுன் ஹைட்ஸ் அருகே யுடிகா அவென்யூ என்ற இடத்தில் துப்பாக்கிச் சூடு நடந்துள்ளதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. சம்பவ இடத்திற்கு சென்றபோது 4 பேர் உயிரிழந்து கிடந்தனர். உயிருக்குப் போராடிய 3 பேரை பொலிஸார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அந்தக் கட்டடத்தில் சட்டவிரோத சூதாட்டம் நடைபெற்றிருக்கலாம் எனக் கருதும் பொலிஸார், அங்கு 15 பேர் சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்று கூறுகின்றனர்.

2 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில், அந்த இடத்தில் 15க்கும் மேற்பட்ட தடவை துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை பொலிஸார் யாரையும் கைது செய்யவில்லை. துப்பாக்கிச் சூட்டுக்கான காரணமும் தெரியவில்லை.

# புதிதாக கட்டப்பட்ட ஹோட்டலில் கிரேன் விழுந்து விபத்து ; ஒருவர் உயிரிழப்பு



வொஷிங்டன்,ஒக்.14

அமெரிக்காவில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த கிரேன் சரிந்து விழுந்து விபத்துக்குள்ளான வீடியோ வெளியாகி உள்ளது.

நியூ ஆர்லியன்ஸ் பகுதியில் ஹார்ட் ராக் என்ற பெயரில் புதிய ஹோட்டல் கட்டப்பட்டு வந்தது. இதற்காக இரவு, பகலாக கட்டுமானப் பணிகள் நடந்து வந்தன.

இந்நிலையில் உணவு இடைவேளையின்போது அங்கு நிறுத்தப் பட்டிருந்த கிரேன் ஒன்று சரிந்து விழுந்தது.

இதனைக் கண்டு சாலையில் ஓடியவர்களும் கட்டட இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்த நிலையில் 18 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளதாக மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

# ஜப்பானை தாக்கிய 'ஹகிபிஸ்' புயல் எண்மர் சாவு; நூறு பேர் படுகாயம்

டோக்கியோ,ஒக்.14

ஜப்பானை தாக்கிய 'ஹகிபிஸ்' புயலுக்கு 8 பேர் பலியாகினர். லட்சக்கணக்கானோர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

ஜப்பான் நாட்டை 'ஹகிபிஸ்' புயல் நேற்று தாக்கியது. இதில் தலைநகர் டோக்கியோவின் தென்மேற்கில் உள்ள பகுதிகள் அதிகம் பாதிக்கப்பட்டன.

மணிக்கு 216 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசிய துடன் ஆயிரக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன. மின் கம்பங்கள் சரிந்தன. வீட்டின் மேற்கூரைகள் தூக்கி வீசப்பட்டன.

ஹகிபிஸ் புயலின் எதிரொலியாக கொட்டித் தீர்த்த பலத்த மழையால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மேலும் பல இடங்களில் பயங்கர நிலச்சரிவும் ஏற்பட்டது.

புயல் தொடர்பான எச்சரிக்கையால் 40 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டு உள்ளனர். மேலும், பல்வேறு நிவாரண முகாம்களிலும் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். ஜப்பான் முழுவதும் சுமார் 2 ஆயிரம் சர்வதேச, உள்நாட்டு விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.



இந்நிலையில், 'ஹிகிபிஸ்' புயலில் சிக்கி 8 பேர் பரிதாபமாக பலியாகி உள்ளனர். மேலும் 100 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என மீட்புக் குழுவினர் தெரிவித்தனர்.

# 504 பக்கங்களில் சுயசரிதை எழுதி வெளியிட்ட பொப் பாடகி



நியூயோர்க்,ஒக்.14

உலகின் முன்னணி பொப் பாடகியான ரிஹானா தனது சுயசரிதையை எழுதி வெளியிட்டார். இதன் மூலம் எழுத்தாளர் என்ற இன்னொரு திறமைக்கும் அவர் புகழ் பெற்றுள்ளார்.

504 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகம் சுமார் 7 கிலோ எடை கொண்டது. ரசிகர்களுடன் உள்ள ஏராளமான நினைவுகளை இதில் தொகுத்திருப்பதாக ரிஹானா கூறுகிறார். நியுயோர்க்கில் மன்ஹாட்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், கடந்த காலத்தில் தமது தொழில் ரீதியான வளர்ச்சி இதில் பதிவாகியிருப்பதாக கூறினார்.

ரிஹானாவின் சிறுபிராயம் முதல் தற்போதைய உச்சம் வரை காலத்தை பதிவு செய்யும் வகையில் பல அரிய புகைப்படங்களின் தொகுப்பாகவும் இந்தப் புத்தகம் உள்ளது. இந்தப் புத்தகம் தமக்கு மகிழ்ச்சியை அளிப்பதாக ரிஹானா கூறினார்.



# காயத்துடன் உயிருக்கு போராடிய உருளை மூக்குத் திமிங்கலம்

## சில மணி நேரத்தில் உயிரிழப்பு

லண்டன், ஒக்.14

ஸ்காட்லாந்தில் படுகாயங்களுடன் உயிருக்குப் போராடிய 36 அடி நீளமுள்ள உருளை மூக்குத் திமிங்கலம் பரிதாபமாக உயிரிழந்தது. நோர்த்அம்பரியன் கடல் பகுதியில் பிரமாண்ட திமிங்கலம் ஒன்று கரை ஒதுங்கியிருந்ததை அப்பகுதி மக்கள் கண்டனர்.

இதையடுத்து கடலோர பாதுகாப்புப் படைக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. தகவலறிந்த காவல் படையினர் திமிங்கலத்தைப் பார்த்த போது, படுகாயங்களுடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது தெரிய வந்தது.

வாழ்வின் இறுதிக்கட்டத்தில் வாலை மட்டும் சுழற்றிக் கொண்டிருந்த உருளை மூக்குத் திமிங்கலம் அடுத்த சில மணி நேரங்களில் பரிதாபமாக உயிரிழந்தது. அடுத்த சில மணி நேரத்தில் கரை ஒதுங்கியதைத் தொடர்ந்து மருத்துவக்குழுவினர் அதன் இறப்புக்கான காரணம் குறித்து ஆய்வு நடத்தி வருகின்றனர்.

# சீனாவுக்கு எதிராக ஹொங்கொங்கில் மீண்டும் பேரணி

ஹொங்கொங், ஒக்.14

ஹொங்கொங்கில் சீனாவுக்கு எதிராக பொது மக்கள் மீண்டும் போராட்டம் மற்றும் பேரணியில் ஈடுபட்டனர்.

சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஹொங்கொங்கில் கடந்த 4 மாதங்களாக சீனாவுக்கு எதிராக போராட்டம், பேரணி நடந்து வருகின்றன. கடந்த 6 ஆம் திகதிக்கு பிறகு போராட்டங்கள் எதுவும் நடக்காத நிலையில், நேற்று முன் தினம் மீண்டும் பேரணி நடந்தது.

கவ்லூன் நகரில் நடந்த பேரணியில், முந்தைய போராட்டங்களை விட மிகக் குறைவாக, வெறும் 2 ஆயிரம் பேர் மட்டுமே பங்கேற்றனர்.

அவர்கள் மழையையும் பொருட்படுத்தாமல், கோஷங்களை எழுப்பியபடி சென்றனர். கவ்லூன் மெட்ரோ ரயில் நிலையத்துக்குள் சிலர் மது போத்தல்களை வீசிச் சென்றனர்.

அதில் யாரும் காயமடையவில்லை. பெற்றோல் குண்டு வீசப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதுபோல், ஹொங்கொங் பொலிஸ் தலைமையகம் முன்பு ஓய்வூதியர்கள் 200 பேர் அமைதியாகப் போராட்டம் நடத்தினர்.



# சீன மக்களின் நாயகன்

# ஜின்பிங்

அரசியல் பின்புலம் கொண்ட குடும்பத்திலிருந்து வந்ததால், எங்கே... எப்படி காய் நகர்த்த வேண்டுமென்பது ஜின்பிங்குக்கு அத்துப்படி.

பக்கத்து நாடாக இருந்தாலும் அமெரிக்க அதிபர்கள்போல, சீன அதிபர்கள் இந்தியாவில் அவ்வளவு பிரபலமாக இருக்கமாட்டார்கள். சீன அதிபர்களிலேயே, இந்தியாவில் அதிகம் அறியப்பட்டவர், தற்போதைய அதிபர் ஷீ ஜின்பிங்தான். சீனாவின் மூன்று முக்கியப் பதவிகளும் ஜின்பிங்கிடமே உள்ளன. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர், நாட்டின் அதிபர், சீனா மக்கள் இராணுவத்தின் தலைவர் ஆகிய மூன்று பதவிகளில் அமர்ந்துள்ளார்.

சீனாவைப் பொறுத்தவரை, இவர்தான் சர்வ வல்லமை படைத்தவர். அரசியல் பின்புலம்கொண்ட குடும்பத்திலிருந்து வந்ததால், எங்கே... எப்படி காய் நகர்த்த வேண்டுமென்பது ஜின்பிங்குக்கு அத்துப்படி. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்றுவித்த, மாசேதுங்குவின் நண்பர் ஷீ ஸாங்க் ஷ்வான் என்பவரின் மகன்தான் ஜின்பிங். தற்போது, 66 வயதான ஜின்பிங் தன்னை 'மக்கள் தலைவர்' என்று அழைத்துக்கொள்வார். உள்ளுக்குள் சாகும் வரை, சீன அதிபராக இருக்க வேண்டுமென்ற ஆசையும் அவருக்கிருப்பதாகத் தெரிகிறது.

சுமார், 40 ஆண்டுகளுக்கு முன் 88 சதவிகித சீனர்கள் நாளொன்றுக்கு 2.7 அமெரிக்க டாலர்களில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தனர். 1995 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டுவரை சீனாவில் 6 கோடி பேர் வேலை இழந்தனர். இப்போது, சீனாவில் 6 சதவிகித மக்கள்தான் வறுமைக்கோட்டுக்குள் இருக்கின்றனர். ஜின்பிங்கின் ஆட்சிக்காலத்தில் சீனப் பொருளாதாரம் செழிப்படைந்துள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அலிபாபா உலகின் முன்னணி ரீடெய்ல் நிறுவனம். சீனாவின் தொழில்கள் மற்றும் வணிக வங்கி ஐ.சி.பி.சி உலகிலேயே மிகப் பெரிய வங்கிகளில் ஒன்று. டென்ஸன்ட் நிறுவனம், கணினி விளையாட்டு மென்பொருள்களைத் தயாரிப்பதில் முன்னணியில் உள்ளது. சைனா சதர்ன் உலகின் மிகப் பெரிய விமானச் சேவை நிறுவனம். உலகிலேயே சாம்சங் நிறுவனத்துக்குப் பிறகு, அதிக செல்போன்களை விற்கும் வாவே, உபெரின் போட்டி நிறுவனமான டிடி போன்ற நிறுவனங்கள் அசுர வளர்ச்சி கண்டது ஜின்பிங்கின் ஆட்சிக்காலத்திலேயே!



> பொருளாதாரத்தில் மட்டுமல்ல, அதிபர் பத வியில் அமர்ந் ததும் ஊழலை ஒழிக்க ஜின்பிங், கடும் நடவடிக்கை எடுத்தார். லஞ்ச ஊழலில் திளைத்த 15 லட்சம் அரசு அதி காரிகள் தண் டிக்கப்பட்டனர்.

பொருளாதாரத்தில் மட்டுமல்ல, அதிபர் பதவியில் அமர்ந்ததும் ஊழலை ஒழிக்க ஜின்பிங், கடும் நடவடிக்கை எடுத்தார். லஞ்ச ஊழலில் திளைத்த 15 லட்சம் அரசு அதிகாரிகள் தண்டிக்கப்பட்டனர். விளைவாக, அரசு நிர்வாகம் சீரடைந்தது. இதுபோன்ற உறுதியான நடவடிக்கைகளால் சீன மக்களின் மனதில் ஜின்பிங் விரைவிலேயே இடம்பிடித்துவிட்டார்.

ஆனாலும், ஜின்பிங்கின் இந்த நடவடிக்கை அவருக்குச் சீனாவில் பல எதிரிகளைச் சம்பாதித்தும் கொடுத்துள்ளது. ராணுவ அதிகாரிகள், கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர்கள் மீதும் நடவடிக்கைகள் பாய்ந்துள்ளன. எதிரிகள் அதிகமானதாலேயே, நிரந்தர அதிபரானால் மட்டுமே தன்னை அரசியல் எதிரிகளிடமிருந்து காத்துக்கொள்ள முடியும் என்பதையும் ஜின்பிங் உணர்ந்தார். அதற்காக, கச்சிதமாகக் காய் நகர்த்தினார், ஜின்பிங்.

1976 ஆம் ஆண்டு, 'சீனாவின் தந்தை' என்று அழைக்கப்பட்ட மாசேதுங் மரணமடைந்தார். பிறகு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்ற டெங் ஜியோபிங்குக்கு உள்ளுக்குள் ஒரு பயம். வருங்காலத்தில் ஏதாவது ஒரு சீன அதிபர் தன்னை 'சர்வாதிகாரி' என்று அறிவித்துவிடக் கூடாதே என்பதுதான் அது. உடனடியாக, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டுவந்தார். சீனாவில் 10 ஆண்டுகளுக்கு மேல் ஒருவர் அதிபர் பதவி வகிக்கக் கூடாது என்று புதிய சட்டம் வகுக்கப்பட்டது. இந்தச் சட்டத்தையே தனக்காக மாற்ற வைத்துவிட்டார் ஜின்பிங். கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக்குழு கூடி சீன அதிபர் பதவி விஷயத்தில் முக்கிய முடிவெடுத்தது.

அந்த முடிவு, சீனாவின் நிரந்தர அதிபர் பதவியை ஜின்பிங்குக்கு வழங்கும் விதத்தில் அமைந்தது. 'சீன அதிபர் பதவியில் இனிமேல் ஒருவர் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் தொடரலாம்' என்கிற புதிய விதி கொண்டுவரப்பட்டது. வாக்களிப்பில் பங்கேற்ற 3,000 பேரில் 2 பேர் மட்டுமே எதிர்த்து வாக்களித்தார்கள். 3 பேர் வாக்களிக்கவே வரவில்லை. 2,995 வாக்குகள் வித்தியாசத்தில் இந்தச் சட்டத்திருத்தம் வெற்றிபெற்றது. 2023 ஆம் ஆண்டு வரை ஜின்பிங்குக்குப் பதவிக்காலம் உள்ளது. புதிய சட்டத்தால் ஜின்பிங் சீனாவின் நிரந்தர அதிபராகத் தொடரவும் வாய்ப்புள்ளது.

பார்க்க, சற்றே கரடுமுரடாக இருக்கும் சீன அதிபர் காதல் திருமணம் முடித்தவர்தான். முதல் திருமணம் விவகாரத்தில் முடிய, சீனாவின் பிரபல பாடகியான Penng Liyuvan ஐக் காதலித்து கரம் பற்றினார் ஜின்பிங். இந்தத் தம்பதிக்கு, ஒரு மகள் உண்டு. சீனாவில், 'ஒரு தம்பதிக்கு ஒரு குழந்தை' என்ற சட்டம் நடைமுறையில் இருந்ததால், ஜின்பிங் மேற்கொண்டு குழந்தைகள் பெற்றுக்கொள்ளவில்லை. ஒரு குழந்தைச் சட்டத்தையும், 2015 ஆம் ஆண்டு ஜின்பிங் நீக்கினார்.

## இன்னொரு மாவோ!

மாசே துங்குக்குப் பிறகு சக்தி வாய்ந்த அரசியல் தலைவராக சீனாவில் உருவெடுத்துள்ளார் ஜி ஜின்பிங். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர், சீன மக்கள் குடியரசின் அதிபர், சீனாவின் மத்திய ராணுவ ஆணையத்தின் தலைவர், கட்சியின் தனிப்பெரும் தலைவர் என்று ஒரே சமயத்தில் பல உயர் பதவிகளை வகிக்கிறார். மாவோவின் சிந்தனைகள் எப்படி கட்சியின் சித்தாந்தங்களி லும் நாட்டின் சட்டங்களிலும் தாக்கம் செலுத்தினவோ அப்படி இன்றைய சீனாவில் ஜி ஜின்பிங்கின் சிந்தனைகளும் தாக்கம் செலுத்துகின்றன.

1953 இல் பிறந்த ஜி ஜின்பிங்கின் தந்தை ஜி ஜாங்க்ஸன், மாவோவின் ஆட்சிக்காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைப் பரப்புப் பிரிவின் தலைவராகவும் மாகாணத் துணை முதல்வராகவும் முக்கியப் பொறுப்புகளை வகித்தவர். ஆனால், மாவோ முன்னெடுத்த கலாசாரப் புரட்சியின் போது, கட்சியிலிருந்து ஜி ஜாங்க்ஸன் நீக்கப்பட்டதோடு சிறையிலும் அடைக்கப்பட்டார். சிறுவனான ஜின்பிங்கும் யான்சுவான் என்ற ஊரகப் பகுதியில் முகாமில் அடைக்கப்பட்டார்.

ஆயினும், தந்தையின் வழியில் அவர் அரசியல் நோக்கி நகர்வதில் இவையெல்லாம் எந்தத் தடையையும் உருவாக்கவில்லை. ஜின்பிங் தன்னை கம்யூனிஸ்ட் கட்சியில் ஈடுபடுத்திக் கொண்டார். அங்கே அவர் தொழிலாளியாக, விவசாயியாக, ராணுவ வீரராக வேலைகளைச் செய்துகொண்டே சிங்ஹூவா பல்கலைக்கழகத்தில் படித்தார். பியுஜியான், ஜேியாங் ஆளுநராகப் பதவி வகித்தவர், 2007 இல் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2008 இல் சீனத் துணை அதிபரானார். பிறகு, கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும் அதிபராகவும் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

இதற்குப் பின் கட்சியிலும் ஆட்சியிலும் தன்னை மிக வலுவான இடத்திலும் அதிகாரங்கள் அத்தனையும் தன்னைச் சுற்றிலும் சுழல்வதாகவும் அவர் மாற்றிக்கொண்டார். இன்றைக்கு அவருக்குச் சவால்விடக்கூடிய தலைவர் எவரும் சீனாவில் இல்லை என்பது போக, வரலாற்றில் மாவோவுக்கு அடுத்து சக்தி வாய்ந்த தலைவர் என்ற இடத்துக்கும் தன்னை நகர்த்திக்கொண்டிருக்கிறார்.

ஜின்பிங்கின் முக்கியமான சாதனை என்றால், மக்கள் இடையேயான ஏற்றத் தாழ்வைக் குறைப்பதிலும், எளிய மக்கள் மேலேறிவரும் பாதையைத் தடுப்பதில் பெரிய தடைக்கல்லாக இருக்கும் ஊழலை ஒழிப்பதிலும் அவர் காட்டிவரும் தீவிரம். இதில் சொந்தக் கட்சியினர், வேண்டப் பட்டவர்கள், விசுவாசிகள் என்ற எந்தப் பாகுபாட்டையும் அவர் பார்க்கவில்லை.

மேலும், சாதி அமைப்பு போன்ற தடைச் சூழல் எதுவும் இன்றைய சீனாவில் இல்லை. ஜின்பிங் உண்டாக்கியிருக்கும் மோசமான பாதிப்பு என்றால், சீன அரசிலும் கட்சியிலும் யதேச்சதிகாரத்தை மேலும் அவர் வளர்த்திருக்கிறார்; ஜனநாயகத்தின் நிலை மேலும் மோசமாகியிருக்கி றது.

உலகின் தலைமையை அமெரிக்கா விடம் இருந்து பறித்து சீனாவை அந்த இடத்தில் அமர்த்துவது ஜின்பிங்கின் முக்கிய மான லட்சியம். அவருடைய எந்த உறவும் முனைப்பும் இதை மைய மாக உள்ளடக்கியது என்ற புரிதல் முக்கிய மானது!



# யாழ்ப்பாண விமான நிலையத் திறப்பு விழா; தேர்தல் ஆணைக்குழு முற்கூட்டி எச்சரிக்கை

யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையத் திறப்பு விழாவை அரசியல்வாதிகள் தமது அரசியல் நலன்களை அடைவதற்காகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையத் திறப்பு விழா எதிர்வரும் 17ஆம் திகதி நடக்கவுள்ளது.

இது குறித்து யாழ்ப்பாணம் மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.சி.அமல்ராஜ் கருத்து வெளியிடுகையில்,

தேர்தலுக்கான நாள் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த இடத்தை அரசியல்வாதிகள் எவரும் தமது அரசியல் நலனுக்காக பயன்படுத்திக் கொண்டால், அது தேர்தல் சட்ட மீறலாக கருதப்படும்.

எனவே, அவ்வாறு அரசியல் நலனைப் பெறுவதற்காக விமான நிலைய திறப்பு விழாவைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டாம் என்று அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். என்று கூறியுள்ளார். (ஐ)

## 'நந்திக்கடல் பேசுகிறது' நூல் நேற்று வெளியீடு





யாழ்ப்பாணம், ஒக். 14

போர்க் காலத்தில் இடம்பெற்ற துயரங்களை அடிப்படையாகக் கொண்ட நந்திக்கடல் பேசுகிறது நூல் நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணம் கலைத் தூது கலையகத்தில் இடம்பெற்ற நூல் வெளியீட்டில் முதல் பிரதியை அருட்தந்தை ரவிச்சந்திரன், சூழலியலாளர் ஐங்கரநேசன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறை விரிவுரையாளர் ரகுராம் ஆகியோர் இணைந்து விடுதலைப்போரில் தளபதியாக இருந்த சோதியாவின் தாயாரிடம் வழங்கினர்.

யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பில் இந்த நூல் பேசுகிறது. (ஐ- 07)

## பலாலி ஓடுபாதை ஆய்வுக்காக வருகிறது இந்திய நிபுணர் குழு



கொழும்பு, ஒக். 14

யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையத்தின் ஓடுபாதையை பரிசீலனை செய்து, இந்திய அரசுக்கு இறுதி அறிக்கையைக் கொடுப்பதற்காக, இந்திய நிபுணர்கள் குழுவொன்று நாளை பலாலிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இந்திய அரசுக்குச் சொந்தமான எயார் இந்தியாவின் துணை நிறுவனமான அலையன்ஸ் எயார் விமானமே யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையத்துக்கான முதலாவது பயணத்தை மேற்கொள்ளவுள்ளது.

இந்த நிலையிலேயே, புதிதாக அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையத்தின் ஓடுபாதையை ஆய்வு செய்து, இந்திய அரசுக்கு இறுதியான அறிக்கையைச் சமர்ப்பிக்க இந்திய நிபுணர்களின் குழு நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளது. (ஐ)

## சஜித்துக்கு ஆதரவு தெரிவித்து பதுளையில் பிரசார கூட்டங்கள்

கொழும்பு, ஒக். 14

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து மூன்று தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் பதுளையில் நடைபெற்றன.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில், இந்தக் கூட்டங்கள் நேற்று நடைபெற ஏற்பாடாகி இருக்கின்றன.

பசறை, ஹாலி – எல, அப்புத்தள ஆகிய இடங்களிலேயே இந்த பிரசாரக் கூட்டங்கள் நடைபெறவுள்ளதாக தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

முதலாவதுகூட்டம்காலை 9.30 மணியளவில் பசறையிலும், பிற்பகல் 1 மணிக்கு ஹாலி – எலயிலும் 2 மணிக்கு அப்புத்தளையிலும் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆறுமுகன் தொண்டமான் கோட்டாவுக்கே ஆதரவு!



கொழும்பு, ஒக். 14

ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன்போதே அந்தக் கட்சி தனது ஆதரவை கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கியுள்ளது.

தோட்டத்தொழிலாளர்களின் 32 பிரச்சினைகளை முன்னிறுத்தி, கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிப்பது என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் குறிப்பிட்டுள்ளது.(ஐ)

## கடல் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை காலியில் அமைக்கும் இந்திய நிறுவனம்



இலங்கையில் கடல் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை அமைப்பதற்கான ஒப்பந்தத்தை இந்திய நிறுவனம் ஒன்று பெற்றுள்ளது.

பாரத் இலத்திரனியல் நிறுவனம் என்ற இந்திய நிறுவனமே, இந்த கடல் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை அமைக்கவுள்ளது.

இதற்கு அமைச்சரவை கொள்வனவுக்குழு அங்கீகாரம் அளித்துள்ளது.

60 இலட்சம் டொலர் செலவில் இந்த அமையம் அமைக்கப்படவுள்ளது.

கடலில் ஆபத்தை எதிர்கொள்ளும் மீனவர்கள் மற்றும் கடல் பணியாளர்களை மீட்பதற்காக இந்த மையம் அமைக்கப்படவுள்ளது.

இந்தமையத்தை காலியில் அமைப்பதற்கு அனுமதி கோரும் அமைச்சரவைப் பத்திரத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமர்ப்பித்திருந்தார்.

இலங்கை விமானப்படை, இலங்கை கடலோரக் காவல்படை, மற்றும் வணிகக் கப்பல் செயலகம் என்பன இந்த மையத்தின் இணைப் பங்காளர்களாக இருக்கும். (ஐ)

northern PC Park
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskada Junction Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park 0777570124 0215675566
NPcpark 0773366443 0212229581
northernpcpark 0766999597 0212222050
Northern Pc Park 0717772377 0212222388



# பார்படோஸ் அணி சம்பியன்

கரீபியன் பிரீமியர் லீக் 'ருவெண்டி 20' கிரிக்கெட் தொடரில் ஜேசன் ஹோல்டர் தலைமையிலான பார்படோஸ் அணி வெற்றி பெற்று இரண்டாவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

மேற்கிந்திய தீவுகளில் கடந்த ஒரு மாத காலமாக கரீபியன் பிரீமியர் லீக் தொடர் நடைபெற்றது. இதன் இறுதிப்போட்டி நேற்று நடைபெற்றது.

அதில் ஜேசன் ஹோல்டர் தலைமையிலான பார்படோஸ் டிரைடண்ட்ஸ் அணியும், சொயிப் மாலிக் தலைமையிலான கயானா அமேசன் வாரியர்ஸ் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்றிபெற்ற பார்படோஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 171 ஓட்டங்கள் எடுத்தது.

பார்படோஸ் அணியின் ஜேசன் சார்லஸ் 39 ஓட்டங்களையும், ஜோனாதன் கார்டர் 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இதையடுத்து, 172 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கயானா அணி களமிறங்கியது.

அந்த அணியின் தொடக்க வீரர் பிராண்டன் கிங் மட்டுமே அதிகபட்சமாக 43 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மற்ற வீரர் கள் நிலைத்து நிற்கவில்லை.

இறுதியில், கயானா அமேசன் அணி 9 விக்கெட் இழப்புக்கு 144 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பார்படோஸ் அணி வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை இரண்டாவது முறையாக கைப்பற்றி அசத்தியது.

பார்படோஸ் அணியில் அரை சதமடித்த ஜோனாதன் கார்டர் ஆட்ட நாயகன் விருது பெற்றார். அந்த அணியின் ஹெய்ட்ன் வோல்ஷ் தொடர் நாயகன் விருது பெற்றார்.

# மலிங்கவுக்குப் பிறகு ரி-20 தலைவர் யார்?



இலங்கை ரி-20 கிரிக்கெட் அணியின் தலைவர் லசித் மலிங்கவிற்கு பிறகு, யார் அணியை வழிநடத்தப் போகிறார் என்பது குறித்து இலங்கை தேர்வுக் குழுவின் தலைவர் அசந்த டி மெல் கூறியுள்ளார்.

தற்போதைய தலைவரான லசித் மலிங்க ஓய்வு பெற்றால், அவரது இடத்துக்கு நிரோஷன் டிக்வெல்ல அல்லது தசுன் ஷானக்கவை நியமிப்பது குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தொடரில் இருந்து நிரோஷன் டிக்வெல்ல விலகிக் கொண்ட காரணத்தால் தான் தசுன் ஷானக்கவுக்கு தலைவர் பதவியைக் கொடுத்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே லசித் மலிங்க ஓய்வு பெற்றதன் பின்னர், இவர்கள் இருவ ரில் யாருக்கு அணித்தலைவர் பொறுப்பைக் கொடுப்பது என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

தசுன் ஷானக்க தலைமையிலான இளம் வீரர்களை கொண்ட இலங்கை படையணி, பாகிஸ்தானுக்கு சென்று மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை முழுமையாகக் கைப்பற்றி, வரலாற்று சாதனைப் படைத்தது.

# பாக். அணித் தலைவரின் பதாகை அடித்து உடைப்பு!



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, இலங்கை இரண்டாம் தர அணியிடம் ரி-20 தொடரை முழுமையாக இழந்ததன் எதிரொலியாக, பாகிஸ்தான் அணித்தலைவர் சப்ராஸ் அஹமட்டின் பதாகை அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

சொந்த மண்ணில் 3-0 என்று பாகிஸ்தான் தோற்றது அந்நாட்டு இரசிகர்களை கடும் கோபத்துக்கு ஆளாக்கியுள்ளதன் வெளிப்பாடாக இது பார்க்கப்படுகின்றது.

பாகிஸ்தானில் உள்ள சப்ராஸ் அஹமட்டின் பதாகையை இரசிகர் ஒருவர், அடித்து உடைக்கும் காணொலியொன்று தற்போது இணையத்தில் வைரலாக பரவி வருகின்றது.

சர்வதேச ரி-20 கிரிக்கெட்டில் தங்களுடைய முதல் 3-0 என்ற வைட்வொஷ் வெற்றியினையும், பாகிஸ்தான் அணிக்கெதிராக ரி-20 கிரிக்கெட்டில் தொடரொன்றை கைப்பற்றிய அணியாகவும் இலங்கை அணி, முத்திரைப் பதித்தது.

இதற்கு முன்பாக 2015ஆம் ஆண்டு ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கெதிரான தொடரில், வெள்ளையடிப்புச் செய்த பிறகு இப்போதுதான் பாகிஸ்தான் அணி வெள்ளையடிப்புக்கு ஆளாகியுள்ளது.

# நான் விரக்தியடைந்ததே கிடையாது



கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீசுவதில் தான் விரக்தியடைந்ததே கிடையாது என தமிழகத்தைச் சேர்ந்த இந்திய வீரர் அஸ்வின் கூறியுள்ளார்.

இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் புனேயில் நடைபெற்று வருகிறது. தென்னாபிரிக்கா முதல் இன்னிங்சில் மளமளவென விக்கெட்டுக்களை இழந்தாலும் 9ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த பிலாண்டர், மகாராஜ் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். சுமார் 40 ஓவர்களுக்கு மேல் சந்தித்த இந்த ஜோடி 100 ஓட்டங்கள் குவித்தது.

இறுதியில் அஸ்வின் இந்த ஜோடியை பிரித்தார். முதல் இன்னிங்ஸில் 28.4 ஓவர்கள் வீசி 69 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து நான்கு விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

இதுகுறித்து அஸ்வின் கூறுகையில் – நான் பந்து வீசும்போது விரக்தியடைந்ததே கிடையாது. விரக்தி என்பதை நான் விரும்பியதே இல்லை. அதைக் காட்டிலும் மீண்டும் பந்து வீசவே விரும்புவேன்.

கடைநிலை துடுப்பாளர்கள் என்று மிகைப்படுத்தி பேசுகிறார்கள். யாராவது ஒருவர் சிறப்பாக துடுப்பாட்டம் செய்தால், அவர் சிறப்பாக துடுப்பாட்டம் செய்பவர். தற்போதைய நாளில், யாருமே மோசமாக துடுப்பாட்டம் செய்பவர் அல்லர். நம்முடைய அணியில் 11ஆவது வீரர் வரை சிறப்பாக துடுப்பாட்டம் செய்கிறார்கள் என கூறியுள்ளார்.



# பளுதூக்கலில் ஆசிகா சாதனை

தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் வி.ஆசிகா 3 புதிய சாதனைகளைப் படைத்துள்ளார்.

இலங்கை தேசிய மட்ட திறந்த வயதுப் பிரிவினருக்கான பெண்களிற்கான பளுதூக்கல் போட்டிகள் கொழும்பு டொறிங்டன் உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன் தினம் நடைபெற்றன.

இதில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வி. ஆசிகா 64 கிலோ எடைப் பிரிவில் சினெச் முறையில் 77 கிலோ பளுவையும் மற்றும் கிளின் அன் ஜக் முறையில் 98 கிலோ பளுவையும் தூக்கினார்.

அவர் ஒட்டுமொத்தமாக அடிப்படையில் 175 கிலோ பளுவைத் தூக்கி 3 சாதனைகளுடன் தங்கப்பதக்கம் வென்றார். (ஐ)

# மஹிந்தவின் புதல்வர்களது திருமணங்களில் சந்தேகமாம்!



கொழும்பு, ஒக். 14

மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தில் ஒரே வருடத்தில் மூன்று புதல்வர்களின் திருமண நிகழ்வை விமரிசையாக நடத்துவதற்கும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குமான நிதி எங்கிருந்து பெறப்படுகிறது என சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

சிறிகொத்தாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஒருவேளை கோட்டாபய ஆட்சியமைத்தால் அவரிடம் கேட்பதற்கு ஒரு கேள்வி இருக்கின்றது. மஹிந்த குடும்பம் முன்னெப்போதும் எவ்வித வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை.

ஆனால் ஒரே வருடத்தில் மஹிந்தவின் மூன்று புதல்வர்களின் திருமண நிகழ்வை விமரிசையாக நடத்துவதற்கும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் பெருமளவு நிதியை எங்கிருந்து பெற்றுக்கொள்கின்றார்கள் என்று தெரியவில்லை.

அதுவே இன்று ஒட்டுமொத்த நாட்டினதும் கேள்வியாக இருக்கின்றது. அத்தோடு குறிப்பிட்டளவு நிதி நாட்டிலிருந்து காணாமல் போயிருக்கிறது என்றும் தகவல் கிடைத்துள்ளது.

நாம் நல்லாட்சி அரசை ஸ்தாபித்த பின்னர் ஊடகவியலாளர்களுக்கு முழுமையான சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தோம்.

அவர்கள் விரும்பியதை எழுதுவதற்கும் கேள்வி கேட்பதற்கும் வாய்ப்பிருந்தது. ஆனால் மஹிந்த தரப்பு கடந்த காலத்தைப் போன்றே பல்வேறு வன்முறைகள் நிறைந்த ஒரு குடும்ப ஆட்சிக்குள்ளேயே நாட்டை மீண்டும் கொண்டு செல்வதற்கு முயற்சிக்கின்றது.

எனவே ஏற்கனவே அடைந்து கொண்டிருக்கும் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதா அல்லது மீண்டும் இருண்ட யுகத்திற்குள் செல்வதா என்ற தீர்மானத்தை மக்கள் மேற்கொள்ள வேண்டும் – என்றார். (ஐ)

## எம்மை நம்பி அணி திரளுங்கள்! கிளிநொச்சியில் டக்ளஸ் எம்.பி



கிளிநொச்சி, ஒக். 14

சர்வதேசத்தினூடாக எமது மக்களுக்கு எத்தகைய தீர்வுகளும் கிடைக்கப்போவதில்லை.நாம் முன்னெடுத்துவரும் தேசிய நல்லிணக்கத்தினூடாகவே பழிவாங்கல்கள் பாரபட்சங்கள் அற்ற வகையில் எமது மக்களின் அபிலாசைகளை பெற்றுக்கொள்ள முடியும். அந்தவகையில் எந்தவொரு பழிவாங்கல்களுக்கும் இடம் கொடுக்காத வகையில் எமது மக்களின் எதிர்காலத்தை ஒளிமயமானதாக அமைக்கும் வழிமுறையை உருவாக்கித்தர எம்மால் முடியும். ஆனால் அதற்கு அரசியல் பலமே எமக்கு வேண்டும். தற்போது எமது மக்கள் முன் சிறந்ததொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்த சந்தர்ப்பத்தை எமது மக்கள் நான் காட்டும் வழிமுறைக்கு அணி திரண்டு அரசியல் பலத்தை தருவார்களேயானால் நிச்சயம் எமது மக்களின் அனைத்து அபிலாசைகளுக்கும் விரைவில் தீர்வு பொற்றுத்தருவேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மாவட்டத்தின் நிர்வாகச் செயலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடன் விசேட சந்திப்பொன்றை மேற்கொண்டு சமகால அரசியல் மற்றும் கட்சியின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் தென்னிலங்கையில் மட்டுமல்ல தமிழ் மக்களுக்கும் நம்பிக்கையான தலைமையாகவே இருந்து வழிநடத்தி வந்திருந்திருக்கின்றோம். ஆனாலும் துரதிஷ்டவசமாக மக்கள் எமக்கு அரசியல் ரீதியான பலத்தை முழுமையாக தந்திருக்கவில்லை.

கடந்தகால தமிழ் அரசியல் தலைமைகள் முன்னெடுத்துவந்த சுயநலப்போக்கு அரசியலையே இன்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் முன்னெடுத்து வருகின்றனர். இவர்களது இத்தகைய போக்குகள்தான் இன்றுவரை எதுவித தீர்வுகளையும் காணமுடியாமைக்குக் காரணம்.

ஆனால் நாம் முன்வைக்கும் வாக்குறுதிகளுக்கு நாங்களே பொறுப்பாளர்கள். நாம் எதனையும் தற்துணிவுடன் செய்து காட்டியவர்கள். மக்கள் எனக்கு நம்பிக்கையுடன் தமது அரசியல் பலத்தை தருவார்களானால் அதைவிட அதிகம் செய்விப்போம். செய்வோம் செய்விப்போம் என்பதே எமது செயற்பாடுகளாக அமைந்திருந்திருக்கின்றன.

கடந்த காலங்களில் இந்த மாவட்டத்தில் எமது மக்கள் பல வாய்ப்புக்களை இழந்துள்ளதுடன் பல அசௌகரியங்களையும் சந்தித்து வந்தனர்.

ஆனால் நாம் அவ்வாறு எச்சந்தர்ப்பத்திலும் பாரபட்சம் காட்டியது கிடையாது. அதுமட்டுமல்லாது எமது மக்களின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்து அவர்களது அபிலாஷைகளை பெற்றுக்கொடுப்பதிலேயே அயராது உழைத்து வருகின்றோம்.

இனியும் எமது மக்களுக்கு வலிகள் வேண்டாம். வியர்வை சிந்தி உழைத்து வாழும் மக்களாக எமது மக்களை நாம் உருவாக்குவோம்.

நாம் தேர்தல் காலங்களில் மக்களிடம் கொடுத்த வாக்குறுதிகளை ஒருபோதும் தட்டிக்கழித்தது கிடையாது. மக்களை ஏமாற்றியதும் கிடையாது. அதேபோல யதார்த்தத்துக்கப்பற்பட்ட விடயங்களை கூறியதும் கிடையாது.

கடந்தகாலங்களில் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் நாம் மேற்கொண்ட பெரும் பணிகளே இதற்குச் சான்றாகும்.

எமது மக்கள் நாம் பயணிக்கும் பாதையை பலப்படுத்தி என்னுடன் அணிதிரண்டு வருவார்களானால் எமது மக்களின் எதிர்காலத்தை வெற்றி கொண்டு அதை சாதித்துக் காட்ட எம்மால் முடியும்.

அதற்கான நம்பிக்கையும் ஆளுமையும் எம்மிடம் உண்டு.அதற்கான சந்தர்ப்பம் மறுபடியும் எமது மக்களிடம் கிடைத்துள்ளது.

அந்தவகையில் நீங்கள் எம்மை நம்புங்கள். நான் உங்கள் அபிலாஷைகளுக்கு நிச்சயம் தீர்வுகண்டு தருவேன் – என்றார். (ஐ)

## போதைப்பொருளுடன் 25 பேர் கைதாகியுள்ளனர்

கொழும்பு, ஒக். 14

அவிசாவளை – தெம்பிலியான பகுதியில் போதைப்பொருளுடன் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியிலுள்ள விருந்தகம் ஒன்றில் பேஸ்புக் மூலமாக ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வில் பங்குபற்றியவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 4 பெண்கள் உட்பட 25 பேரை கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து இதுவரை 459 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 14

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக இதுவரை 459 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 8ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியிலே இந்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன எனக் கூறப்பட்டுள்ளது.

அவற்றில் தேர்தல்கள் சட்டமீறல் தொடர்பில் 433 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. (ஐ)




# போக்குவரத்து விதியை மீறியோருக்கு மும்மொழிகளிலும் தண்டனைச் சீட்டு



யாழ்ப்பாணம், ஒக். 14

தமிழ்பேசும் மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க வீதிப் பயணத்தின்போது வழங்கப்படும் தண்டனைச் சீட்டானது இனிவரும் காலங்களில் மூன்று மொழிகளிலும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளன என வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இதுவரை காலமும் வாகனச் சாரதி வீதிப்போக்குவரத்து விதிகளை மீறும் பட்சத்தில் அந்தச் சாரதியின் வாகன உரிமம் பறிமுதல் செய்யப்பட்டு தண்டனைச் சீட்டு வழங்கப்பட்டது.

ஆனால் அந்த தண்டனைச்சீட்டில் தண்டனைகள் என்ன ஏது என்பது தொடர்பில் சிங்கள மொழியிலேயே குறிப்பிடப்பட்டிருந்தன.

இது தொடர்பில் தமக்குத் தெளிவின்மை காணப்படுவதாகவும் இதனை மாற்றியமைத்து தமிழில் அவை வழங்கப்படவேண்டும் எனவும் மக்கள் வடக்கு ஆளுநரிடம் கோரியிருந்தனர்.

இது குறித்து ஜனாதிபதியிடம் வடக்கு ஆளுநர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தத் தண்டனைச் சீட்டில் மூன்று மொழிகளிலும் தண்டனைகள் என்ன என்பது தொடர்பில் குறிப்பிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக தண்டனைச்சீட்டில் குறிப்பிடப்படும் இலக்கத்தை அதன் மறுபக்கத்தில் உள்ள தண்டனைப் பட்டியலில் இலகுவில் அறிந்துகொள்ளமுடியும் .

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலைத் தொடர்ந்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவால் இதனை நடைமுறைப்படுத்தும் வகையில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சமூக அக்கறையுடன் ஊடகங்கள் செயற்பட வேண்டும் சிரேஸ்ர ஊடகவியலாளர் வித்தியாதரன் சுட்டிக்காட்டு





யாழ்ப்பாணம், ஒக். 14

தமிழ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பிற்கும் யாழ் கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர்களுக்குமான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் யாழ் நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது.

இதன்போது பாதிக்கப்பட்ட சமூகம் தொடர்பான புரிதலையும் அவர்கள் தொடர்பான விடயங்களையும் வெளிக் கொண்டு வர வேண்டுமென்ற நோக்கோடு தமிழ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பினால் முன்னெடுக்கப் பட்டு வரும் செயற் திட்டங்கள் தொடர்பாகவும் பாதிக்கப்பட்டோர்களது எதிர்கால வாழ்வியல் மாற்றங்கள் குறித்தான விடயங்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மாற்றுத் திறனாளிகள் அமைப்பிற்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையே கலந்துரையாடலொன்றும் நடத்தப்பட்டது. இக் கலந்தரையாடலில் யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர்கள். மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள். சமூக சேவைகள் திணைக்கள் யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பாதிக்கப்பட்டவர்களின் குரல் எனும் சஞ்சிகையையும் வெளியிட்டதுடன் பாதிக்கப்பட்டவர்களின் குரல் எனும் இணைத் தளத்தையும் மாற்றுத் திறனாளிகள் அமைப்பினால் ஆரம்பித்து வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

சஞ்சிகையின் முதற் பிரதியை சிரேஷ்ர ஊடகவியலாளரும் காலைக்கதிர் பத்திரிகையின் ஆசிரியருமான என்.வித்தியாதரன் பெற்றுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து ஊடகங்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் வித்தியாதரன் கருத்துரை வழங்கியிருந்தார்.

## கருணாவை கொலை செய்யும் திட்டத்துடனேயே முன்னாள் போராளி சினைப்பருடன் மூதூருக்கு!

### விசாரணைகளில் தகவல் என்கிறது பொலிஸ் தரப்பு

கொழும்பு, ஒக். 14

திருகோணமலையில் வைத்துக் கைது செய்யப்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த முன்னாள் போராளியை பிரான்ஸிலிருந்து ஒருவர் இயக்கியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியிலிருந்து சினைப்பர் துப்பாக்கியுடன் கருணாவை கொலை செய்யும் நோக்குடன் அவர் மூதூருக்குச் சென்றவேளையிலேயே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தவை வருமாறு:-

திருகோணமலை சேருநுவர பகுதியில் வைத்து கிளிநொச்சி அம்பாள்குளத்தைச் சேர்ந்த ரொபின் என்ற முன்னாள் போராளி கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

அவர் திருகோணமலையில் தங்கியிருந்த விடுதி அறையை இராணுவத்தினர் சோதனையிட்டபோது, அங்கு சினைப்பர் ரக துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டது.

அவர் விசாரணைகளுக்காக பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

விசாரணைகளில் அவர் கிளிநொச்சி அம்பாள்குளத்தில் வசித்து வருகிறார் எனத் தெரியவந்தது. அது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாருக்கு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் அவரது வீட்டுக்குக் கிளிநொச்சிப் பொலிஸார் சென்றுள்ளனர். அங்கு முன்னாள் போராளியின் சகோதரியும் அவரது மனைவியும் வசித்து வந்துள்ளனர். முன்னாள் போராளிக்கு குழந்தை ஒன்றும் இருந்துள்ளது.

வீட்டைச் சோதனையிட்டபோது, வீட்டின் மேல்தளத்தில் (பிளேட்டில்) உரைப்பையில் கட்டியவாறு ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

அதுதொடர்பில் முன்னாள் போராளியின் சகோதரியும் மனைவியும் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது.

இயற்றாளையைச் சேர்ந்த நான், 2017ஆம் ஆண்டு ரொபினை காதலித்து திருமணம் செய்து எனது பெற்றோர் - உறவினர்களைப் பிரிந்து கிளிநொச்சிக்கு வந்தேன். ரொபின் டோகாவுக்கு தொழில் நிமித்தம் சென்று வந்தார்.

திரும்பி வரும்போது பிரபாகரனின் ஒளிப்படம் பொறிக்கப்பட்ட ரிசேட்டுகளை எடுத்துவந்தார். அதற்கு மேல் அவரது நடவடிக்கைகள் தொடர்பில் எனக்கு எதுவுமே தெரியாது.

அவர் வவுனியாவுக்கு வேலைக்குச் செல்வதாகவே என்னிடம் கூறிவிட்டுச் சென்றார். ஆனால் நேற்று முன்தினம் பொலிஸார் தெரிவித்தபோதே அவர் திருகோணமலையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்பது தெரியும் என்று ரொபினின் மனைவி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த போது ரொபின் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டுள்ளார். அதன்பின்னர் அவர் இராணுவத்தினருக்குத் தகவல் வழங்கும் முகவராகச் சம்பளம் பெற்றுப் பணியாற்றியுள்ளார் என்று தெரிய வருகிறது.

புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னரே அவர் சமூகத்துடன் இணைக்கப்பட்டார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

முன்னாள் போராளியின் அலைபேசித் தரவுகள் ஆராயப்பட்டபோது அவர் பிரான்ஸில் உள்ள ஒருவருடன் தொடர்பில் இருந்துள்ளார் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், கருணாவைக் கொலை செய்வதற்காகவே அவர் மூதூருக்குப் பயணமாகியிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்துக்கு அவருக்கு 2 லட்சம் ரூபா பணம் முற்பணமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, முன்னாள் போராளியின் சகோதரியையும் மனைவியையும் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தி தடுப்புக்காவல் உத்தரவைப் பெற்ற பின் அவர்கள் இருவரையும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

மாநகர சபை புதிய கடைத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.10.2019 இல் வெளியிடப்பெற்றது.